Approved by the Madras Text Book Committee for class use : Vide Page 120 of Part I-B of Fort St. George Gazette dated 19th May 1954.

# வீரமாமுனிவர்

## 1680—1747

★

இயற்றியவர் :

எம். ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ.

தமிழ்த்துறைத் தலைவர்

அர்ச் சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

★

ஒற்றுமை ஆபீஸ்

8, வியாசராவ் தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

காப்பிரைட்] 1955 [ரூபா 1

கல்லூரி இவன் நாமம் கவர வேண்டும்
கழகங்கள் இன்னவன்பேர் காண வேண்டும்
நல்லதிரு வுருவங்கள் இவனைப் போல
நாட்டிடத்து நாம்பரப்பும் நயங்கள் வேண்டும்
சொல்லுவதில் எழுதுவதில் பெஸ்கி தந்த
சுகிர்தமொழி முதன்முதலில் துலங்க வேண்டும்
எல்லோரும் எவ்விடத்தும் இவனை என்றும்
எந்தையெனக் கண்டடையும் இதயம் வேண்டும்.

(புலவர் பாஸ்கரேனஸ்)

## பேராசிரியர் ச. ஆறுமுக முதலியார் M.A., B.O.L., L.T.

அவர்கள் அன்புடன் அளித்த

# சிறப்புரை.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கம் தொட்டே தமிழ் நாட்டிற்கு இறைபணி செய்யும் ஆர்வத்தோடு பல ஐரோப்பிய நாட்டுக் குருக்கள் வந்துள்ளனர். தமிழ் நாட்டிலும் வீட்டிலும் வழங்கும் தாய்மொழியின் வாயிலாகவேதான் தங்கள் சமயக் கொள்கைகளை எளிதில் பரப்ப முடியும் என்ற உண்மையை உணர்ந்த இவர்கள் தமிழ் மொழியை முதலில் ஐயந் திரிபறக் கற்று அதனைச் செம்மையாகப் பேசவும் எழுதவுமான ஆற்றல் கைவரப் பெற்று அதன் வழியாகச் சமயத் துறையில் தொண்டாற்றினர். தமிழ் மொழியிற் சிறந்த புலமையும் பெற்று சொன்னயமும், பொருள் நயமும், நடை நலமும் தொடை நலமும் வாய்ந்த செந்தமிழ்க் காவியங்களுமியற்றும் கற்பனையுற்று விளங்கினர். இவர்கள் சமயத்தொண்டு தமிழ் மொழிக்கும் பல துறைகளிலும் அருந் தொண்டாய் அமைந்தது.

இம் மேனாட்டு ஐரோப்பியத் தமிழ்த் தொண்டர்கள் வரிசையில் தலைசிறந்தவர் இத்தலி நாட்டினின்றும் பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகம் போந்த பெரியார் வீரமாமுனிவர் ஆவார். இவர் செய்த தமிழ்த்தொண்டு பல திறத்தது. இவர் தமிழ் உரைநடையை ஓம்பி வளர்த்தார். தேம்பாவணி யெனும் இணையிலாக் காவியமும் பல பாமாலைகளும் இயற்றினார். செந்தமிழ், கொடுந்தமிழ் இலக்கண நூல்களும், தொன்னூலெனும் நன்னூலும் இயற்றினார். சதுரகராதி தந்துதவினார்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| இளந்துறவி | .... | .... | 1 |
| தமிழ்ப் பண்பு பெற்ற தைரியநாதர் | | .... | 6 |
| திருமறைப் போதகர் | ... | .... | 11 |
| திருக்காவலூர் நிறுவிய தேசிகர் | | ... | 15 |
| காப்பியக் கவிஞர் | .... | .... | 23 |
| இலக்கணப் புலவர் | .... | .... | 37 |
| புதுவசன எழுத்தாளர் | .... | .... | 45 |
| மந்திரியான மாமுனிவர் | .... | .... | 57 |
| அறிஞரும் அடிகளாரும் | ... | .... | 63 |
| தமிழ் வளர்த்த தந்தை | .... | .... | 73 |


**இவ்வாசிரியரின் பிற நூல்கள் :—**

1. இலக்கியப் பொழில்.
2. தமிழ்த் தொண்டர்.
3. தேம்பாவணி வசனம்.
4. பரமார்த்த குரு கதை.

# வீரமாமுனிவர்

•••○O○•••

## இளந்துறவி

இத்தாலி நாட்டின் எழில்சேயாய் உற்பவித்து
சுத்ததமிழ் மண்டலத்தின் தொன்மைமொழி—அத்தனையும்
நன்று பயின்று நலன்கண்ட மாமுனியை
என்றும் துதித்தல் இயல்பு.

**வீ**ரமாமுனிவர் என்ற விழுமிய பெயர்பெற்ற சங்கைக்குரிய பெஸ்கி அடிகளார் இத்தலி நாட்டினர். இவர் தமது தாய்நாடு துறந்து தமிழ்நாடு போந்தவர்; தமிழ் மொழியைத் தமது மொழியாகப் பேணியவர். தமிழ் நாட்டைத் தமது நாடாகப் போற்றியவர். தமிழ் மக்களைத் தமது மக்களாகப் பாராட்டியவர். இவர் செல்வக் குடியில் தோன்றியவர். திருமறைச் செல்வர். சீர்த்தி வாய்ந்த செந்தமிழ் அறிஞர். பன்மொழிப் புலவர். ஓவியக் கலைஞர். இசைப் பயிற்சி மிக்கவர். வாகடத்தில் வல்லவர். அசைவிலா ஊக்கம் நிரம்பிய அயரா உழைப்பினர். கலை நிறைவும் குண நிறைவும் பொருந்த வாழ்ந்த புனிதர். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற உன்னதமான தியாக இலட்சியத்தில் உருப்பெற்றது இம் முனிவர்தம் வாழ்க்கைச் சித்திரம்.

இத்தலி நாடு இயற்கைவளம் கொழிக்கும் எழில் நாடு. இனிய பொழில்கள் நெடிய வயல்கள் எங்கும் நிறைந்த நாடு. கடல் வளமும், காடும், ஆறும் கவின் அமரும் நிலவளமும் ஒருங்கியைந்த நாடு. வனப்பு

வாய்ந்த ஏரிகள் பசுமையான திராட்சைத் தோட்டங்கள் வண்ண அருவிகள் முதலிய கண்ணைப் பறிக்கும் காட்சி நலம் செறிந்த நாடு. உலகத்திலே மிக அழகான நகர்களாகிய **நேப்பிள்ஸ், வெனிஸ், ஜினோவா, பிளாரன்ஸ்** முதலிய தலங்களைத் தன்னகத்தே கொண்ட நாடு. செந்தமிழ் நாட்டை யொத்த வரலாற்றுத் தொன்மையுடையது; பண்பாட்டுப் பெருமை உடையது. சட்ட விதிகளுக்குத் தாயகம். காவியங்கள் ஓவியங்கள் நாடகங்கள் முதலியவற்றைக் கருத்துடன் வளர்த்திடும் கலை அரங்கம். அரசியல் வீரர்களுக்கும் வேதாந்திகளுக்கும் ஆத்ம ஞானிகளுக்கும் அருங்கலைவிநோதர்களுக்கும் அரச ஓவியர்களுக்கும், அற்புதச் சிற்பியர்களுக்கும் பிறப்பிடம். **மாஜினியும் கரிபால்டியும்** போன்ற மகத்தான வீரர்களைப் பெற்ற பெருநாடு, இத்தலி நாடு. **மைக்கல் ஆஞ்சலோ லெயனார்டோ டாவின்சி** போன்ற மாபெரும் சிற்பியரும் ஓவியரும் பிறந்து சிறந்த நாடு இத்தலி நாடு. **சிசரோவைப்** போன்ற **வர்ஜிலைப்** போன்ற நாவலரும் பாவலரும் முழங்கிப் பாடிப் பெருமைபெற்ற திருநாடு இத்தலி நாடு.

இந்நாட்டில் மலர்ந்த வாயால் மணங்கமழும் தாழைக்காட்டு உப்பங்கழியில் உலவித்திரியும் சங்குகள் மருதநிலத்து வயல்வரை சென்று அங்கே முத்துக்களை ஈனும். முத்துக்களின் ஒளியில் தடாகங்கள் மலர்களைப் பூக்கும் பூத்த மலர் கண்டு வண்டுகள் பாடும். வண்டுகளின் பாட்டிசைக்கேற்ப மயில்கள் ஆடும். இத்தகைய வளமார் சோலைகள் இன்சுவைக் கனிகளை ஏராளமாய்த் தரும். இந்த நாட்டில் வாழும் மக்கள் இருவகை அறத்தால், மூவ்வகைச் செல்வத்தால், எழுவகை இன்பத்தால் செழித்த குடிமை சிறந்த நன்மக்கள்.

இருவகை அறம் இல்லறம் துறவறம். மூவ்வகைச் செல்வம் அருட்செல்வம் பொருட்செல்வம் கலைச் செல்வம். எழுவகை இன்பம் இடத்தால் உணவால் உடையால் அறத்தால் அறிவால் பணத்தால் துணையால் எழுவன.

(இந்நாடு செல்வமிகுதியாற் கொண்ட பெருமையை மறைக்கும் அளவுக்கு ஞானத்தால் உயர்ந்திருந்தது. மயக்குவிக்கும் ஆசையை ஒழிக்க வேதமாக விதிக்கும் தேவநூலெல்லாம் தனக்கொரு திருவிளக்காக ஏற்றிக் கொண்ட நாட்டில் நான் பிறந்தேன். என்னுடைய நாடு உலகத்தின் திசைக்கெல்லாம் ஒரு அருள் விளக்காகத் தோன்றி அகிலத்தையே ஆள்வதாயிற்று.)

(இவ்வாறு வளமார்ந்த அத்திருநாடு மேதினிக்கெல்லாம் ஒரு திருவிளக்காய் அமைந்த மேன்மையை முனிவர் முழங்குகின்றார்.)

கத்தோலிக்க திருமறையின் தலைமைப் பீடத்தைக் கொண்ட இப்புண்ணிய நாடு பெஸ்கியரின் அன்னை நாடு. 'எனையீன்ற இணையற்ற இத்தாலியா நாடு' என்று அடிகளார் இயல்புரிமையோடு எடுத்தியம்புதற்குரிய அந்நாட்டிலே அவர் 1680-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ந் தேதி பிறந்தார். அவர் பிறந்தது **வெனிஸ்** மாகாணத்தில் **காஸ்திகிளியோன்** எனும் சிற்றூரில். முழுப் பெயர் **கான்ஸ்டான்ஷியுஸ் ஜோசப் பெஸ்கி.** பெஸ்கி என்பது இவரது குடிப் பெயர். தந்தை **கொண்டல்போ பெஸ்கி**; தாய் **எலிசபெத்.** இப் பெற்றோர் உண்மையாகவே பேறு பெற்றோர், அறிவறிந்த அருமகனைப் பெற்றோர் ஆதலின். இது மட்டுமா? தம் மைந்தன், கிறிஸ்து பிரானின் அருட் சமயத் திருத்தொண்டனாக ஆசை

தெரிவித்தபோது அவர்கள் ஆதரவு தந்தார்கள். தம் மகன் ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து அந்நிய நாடு சென்று ஆண்டவன் திருப்பணியில் ஈடுபட மகிழ்ச்சியுடன் இசைந்தார்கள.

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய என்னருள் நாதனே!
உன்னை நாடுவன் உன்னருள் தூவெளி
தன்னை நாடுவன் தன்னந் தனியனே.

இது இறைபணி செய்ய ஏக்கங் கொள்ளும் எந்த இளைஞனிடத்தும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒப்பற்ற ஆசை. இறைவனது திருப்பணியையே தமது வாழ்க்கையின் நாட்டமாகக் கொண்ட இளைஞர் பெஸ்கி இந்தப் புனித ஆசையின் வயப்பட்டார். தமது 18-வது ஆண்டில் துறவியானார். வேத போதக அலுவலையும் வித்தகப் பணியையும் மேற்கொண்டுள்ள சேசுசபையில் சேர்ந்தார். இச்சபையைச் சார்ந்து இந்நாட்டிற்கு வந்து அயராது உழைத்த **புனித சவரியாரைப்** போலவும் **தத்துவ போதகரைப்** போலவும் கடல்கடந்து வந்து கர்த்தர் பணிசெய்யத் தம்மைச் சித்தம் செய்துகொண்டார் தத்துவ சாஸ்திரம் பயின்றபோது கிரேக்கம் எபிரேயம் லத்தீன் பிரஞ்ச் போர்த்துகீஸ் முதலிய மொழிகளில் புலமை அடைந்தார். பயின்ற நூலைப் பயன்பட விரித்துரைக்கும் பான்மையையும் பெற்றார். 1706-ம் ஆண்டு வேத சாத்திரம் தொடங்கி நான்கு ஆண்டுகள் முறையாகக் கற்றுத் திருமறைக்குருப் பட்டம் பெற்றார்.

இளங் குரு பெஸ்கியர் தமிழ் நாட்டில் இயேசுபிரானின் நற்செய்தியைப் பரப்ப ஆர்வங்கொண்டு அதிகாரிகளை வேண்டினார். சபைத் தலைவர் அவரை மதுரையம்பதிக்கு அனுப்பத் தீர்மானித்தார். 1710-ம் ஆண்டு லிஸ்பனுக்கு விரைந்து வந்த பெஸ்கியர் அங்கிருந்து இன்னுஞ் சில குருக்களோடு சொந்த நாட்டைத் துறந்தார். உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்

பேர் வேண்டேன் என்று சர்வ பரித்தியாகம் செய்து வந்த இளந் துறவி, 1711-ம் ஆண்டு இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள **கோவா** துறைமுகத்தை அடைந்தார்.

கோவா அக் காலத்திலேயே புகழ்பெற்ற கத்தோலிக்க நகராகத் திகழ்ந்தது. அங்கே சிறிது காலந் தங்கிக் கரைக்கப்பல் மார்க்கமாய் வந்து கொச்சித் துறைமுகத்தில் இறங்கி உள்நாட்டிலுள்ள **அம்பலக் காடு** என்னும் இடத்திற்கு வந்தார். அங்கு சேசு சபைக் குருமடம் இருந்தது. தாம் செய்ய இருக்கும் திருப்பணிக்கு ஆயத்தமாக அக் குருமடத்தில் முப்பது நாட்கள் தியானத்தில் அமர்ந்தார்.

**திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி, மணப்பாடு, காமநாய்க்கன்பட்டி, கயத்தாறு** முதலிய இடங்களில் அடிகளார் வதிந்தபோது பல ஆசிரியர்களிடத்துத் தமிழ் நூல்களை முறையே ஓதி உணர்ந்தார்.

அடிகளாருக்குத் தமிழ் உணர்த்திய ஆசிரியருள் தலையாயவர் **சுப்ரதீபக் கவிராயர்.**

முற்காலத் தமிழ் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் பழந் தமிழ் மக்களின் வாழ்க்கைப் படத்தைப் பார்த்து அவர்தம் மேன்மையை உள்ளவாறு உணர்ந்து கொண்டார். 'மொழிக்கு உயிர் அம்மொழியைப் பேசுவோர்; அதைப் பயிலும் பாமரர்; அதைக் கையாளும் ஆடவர் மகளிர் சிறுவர் சிறுமியர்.' இதனை நன்கறிந்த அடிகளார் தமிழ் மக்களுடன் கலந்துறவாடித் தூய தென் தமிழைக் கற்றுத் தெளிந்தார். மக்களின் பழக்க வழக்கங்களில் பரிவுகாட்டி அவற்றை அமைந்தறிந்தார். முனிவர் முயன்றுபெற்ற அறிவும், மக்கள், கலை, நாகரிகம், சமுதாய வாழ்வு இவற்றில் அடிகளார் காட்டிய அக்கறையும் அவர் மேற்கொண்டுவந்த திருமறைப் போதகத்திற்குத் திறமான துணை செய்தன.

## தமிழ்ப் பண்பு பெற்ற தைரியநாதர்

**தானே தமிழானன் தண்டமிழே தானானன்**
**வானே வழுத்தும் வரமானன்—தேனே**
**மொழியானன் முத்தமிழ்நீர் மூழ்கிவிளை யாடும்**
**வழியானன் மாமுனிவன் வந்து.**

பெஸ்கி அடிகள் தமிழ் அன்னையிடத்துக்கொண்ட அன்பு நெஞ்சை அள்ளுவதாகும். தத்தம் பெயர் இலங்க வேண்டுமென்பது அவரவர் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் விழைவு. அடிகளோ தமது இயற் பெயராகிய கான்ஸ்டான்ஷியுஸ் என்பதனைத் தைரிய நாதன் என்று தமிழாக்கம் செய்தார். குடிப்பெயராகிய பெஸ்கியையும் மறந்துவிட்டார். தைரியநாதன் என்பது தமிழன்பு காரணமாக நமது தவமுனிவர் தாமாகவே அமைத்துக்கொண்ட தனிப்பெரும் பெயர். மக்கள் இவர்தம் தமிழ்த் துணிவைக் கண்டு மகிழ்ந்தனர். அறிஞர் இவரை வீரமாமுனிவர் என்று வியந்து போற்றினர்.

தைரியநாதர் தமிழ்மொழியை விழைந்து பயின்றது எத்தகைய சூழ்நிலையில்? அடிகள் அறிந்த ஐரோப்பிய மொழிகளுக்கும் தமிழ் மொழிக்கும் எத்துணையோ வேற்றுமை! அவர்கள் காலத்தில் அச்சிடப்பட்ட நூல்கள் இருந்தனவா? தமிழ் கற்று வல்ல பெரியார்கள் இருக்குமிடம் தேடிச் சென்று பாடங் கேட்கப் போதிய வசதி இருந்ததா? ரயில் உண்டா? மோட்டார் உண்டா? சீரான பாதை இருந்ததா? நேரான தபால்முறை இருந்ததா? நிறைந்த பொருள் இருந்ததா? வறுமை வாக்களித்த துறவிக்குச் செல்வமேது? புலமையால் பொருள்

ஈட்டக் கருதினரோ? புகழ்நாட்டங் கொண்டனரோ? பொருளையும் புகழையும் தூவென உதறித்தள்ளி வந்த துறவிக்குப் பொருள் ஆசையோ புகழாசையோ இருக்க நியாயமில்லை. பிறபிற அலுவல்கள் இன்றித் தமிழ்ப் பயிற்சியிலேயே ஆழ்ந்திருக்க அவருக்கு அவகாசம் இல்லை. தாம் குறித்துவந்த வேத போதக அலுவற் சூழலிடையே தமிழ் அறிவாக்க வேலைகளுக்கும் அடிகளார் நேரம் தேடிக்கொண்டது அவரது தைரியமான தமிழ்ப்பற்றின் மாண்பைத் தெரிவுறுத்துகின்றது.

அடிகளார் தமிழ் கற்க முனைந்துப் பணியாற்றத் தொடங்கிய காலம் அரசியல் கொந்தளிப்பான காலம். மதுரையில் மீனாட்சியம்மை ஆட்சி. தஞ்சையில் நாயக்கர் ஒழிந்தனர். மராட்டியர் ஓங்கினர். அவர்களும் ஆளுந் திறமையற்றிருந்த காரணத்தால் பாளையக்காரர் என்பவர் பக்குவமாய் முளைத்தெழுந்தனர். மக்களைத் துன்புறுத்தினர். மராட்டியர் படையெடுப்பு ஒருபுறம். ஆர்க்காட்டு நவாபின் அணிவகுப்பு ஒருபுறம். இந்த அமளி குமளியான வேளையில் ஆயிரமாயிரம் மைல்கள் கடந்துவந்த அயல்நாட்டார் ஒருவர் தமிழ் மொழியில் கருத்தைச் செலுத்தி, உயர்ந்த இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்து, அம்மொழியிலேயே கவிபாடும் நல்வித்தையும் கைவரப் பெறுதல் எளிதான செயல் அன்று. அது தைரியநாதருக்கே தகைமையாப் பொருந்தும் பொருவறு செயல்.

முனிவர் ஒன்றிரண்டு மொழிகள்மட்டும் தெரிந்தவரல்லர். ஒன்பதிற்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ந்தவர். தமது தாய்மொழியாகிய இத்தாலிய மொழியோடு, கிரேக்கம் எபிரேயம் இலத்தீன் பிரஞ்ச் ஆகிய

மொழிகளில் நிரம்பிய புலமை உடையவர். பார்சி, இந்துஸ்தானி, தெலுங்கு முதலிய மொழிகளில் பயிற்சி உடையவர். இத்தகைய பல மொழிகளை அறிந்த பாங்குடையார்க்குத் தமிழ்மொழி அறிவே இதயத்தைத் தொட்டதாக வேண்டும். பன்மொழிப் புலமையும் கொண்டு அடிகள் தமிழ்ப் பயிர் வளர்த்த தன்மையால் இது தெளிவாகின்றது.

பெஸ்கியர் பிறப்பால் இத்தாலியர். பேச்சால் நடையால் உடையால் பழக்கவழக்கத்தால் உழைப்பால் உள்ளப் பண்பால் தமிழர். அவர் முப்பது ஆண்டுகள் இத்தலி நாட்டில் இருந்தார். முப்பத்தேழு ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து, தமிழ்ப் பண்பில் தழைத்துத் தமிழ் மண்ணில் மறைந்தார். இத்தாலியத் தமிழ் முனிவரைத் தமிழ் உலகம் இனிய தமிழ் முனிவராக ஏற்றுப் போற்றுங் கடப்பாடுடையது. அயல் நாட்டுத் தமிழர்கள் பலர், தமிழைப் பயிற்சிக்குரிய, ஆராய்ச்சிக்குரிய ஒரு மொழியாகக் கொள்வதை அறிவோம் அடிகள் தமிழ் மொழியைப் பயிற்சிக்குரிய ஆராய்ச்சிக்குரிய ஒரு பொருளாக மட்டுங் கொள்ளவில்லை. தமிழைத் தன் அன்னை மொழியாகக் கொண்டு தமிழே தாமானார்; தாமே தமிழானார்.

" இவர் (சங்கைக்குரிய பெஸ்கி அடிகள்) இந்தத் தேசத்தில் வந்த நாள்முதலாய்ப் புலால் மாம்ஸங்களை நிவர்த்தித்து இரண்டு தமிழ்த் தவசிப்பிள்ளைகளைப் பரிசுத்த அன்னபாகஞ் செய்யச் சொல்லித் தினம் ஒரு பொழுது மாத்திரம் போசனம் பண்ணிக்கொண்டிருப்பார்."

" தமது மடத்திலிருக்கும்போது கோபிச் சந்தனம் நெற்றியிலிட்டுக் கொண்டுத் தலைக்குச் சூரியகாந்திப் பட்டுக் குல்லாவும், அரைக்கு நீர்க்காவிச் சோமனும், திருநெல்வேலிக் கம்பிச் சோமன் போர்வை முக்காடுமிட்டுக் காலில் பாதகுறடும் போட்டுக்கொண்டிருப்பார். இவர் வெளியில் சாரி போகும்போது பூங்காவி அங்கியும், பூங்காவி நடுக்கட்டும், வெள்ளைப் பாகையும், இளங் காவி யுத்தரிய முக்காடும், கையினிற் காவியுறுமாலையும், காதில் முத்துக் கடுக்கனும், விரலில் தம்பாக்கு மோதிரமும் கையில் தண்டுகோலும் காலில் சோடுடனும் வந்து பல்லக்கின் மெத்தையின் மேலிட்டிருக்கும் புலித் தோலாசனத்தின்மேல் எழுந்தருளியிருந்து உபய வெண் சாமரை வீசவும், இரண்டு மயிற்றோகைக் கொத்திரட்டவும், தங்கக் கலசம் வைத்த காவிப்பட்டுக் குடை பிடிக்கவும் சாரி போவார். இவர் இறங்குமிடங்களிலும் புலித்தோலாசனத்தின்மேல் உட்காருவார்." இவ்வாறு தைரியநாதரின் தமிழ் வடிவைத் தீட்டிக் காண்பிப்பவர் சென்னைக் கல்விச் சங்கத்து மானேஜராக விளங்கிய **பண்டித முத்துசாமிப்பிள்ளை**யவர்கள். 1843-ல் இப்பண்டிதரவர்கள் எழுதிய வீரமாமுனிவர் சரித்திரத்தில் இச்சித்திரம் காணப்படும். இக்கவினுறு ஓவியத்தில் பொறிக்கப்பட்ட யாவும் புறக்கோலமெனப் புறக்கணிப்பதற்கில்லை. தமிழ்மொழிப் பயிற்சியில் ஈடுபட்டுத் தமிழ் நூற்களின் இனிமை எளிமை ஆழமுடைமை ஆகிய உயர் பண்புகளில் தோய்ந்து தோய்ந்து, இலக்கணம் இலக்கியம் விவகாரம் பனுவல் என்று பகுக்கப்பெற்ற துறை தோறும் இலங்குநூல் எழுதும் ஏற்றம் பெற்ற அடிகளாரின் தமிழ் உள்ளப் பாங்கின் விரிவே இந்த வெளிக் கோலம் என்று கூறுதல் அமைவுடையது.

தைரியநாதரின் தமிழ்ப் பயிற்சிக்குப் பெரிதும் துணை புரிந்த ஆசிரியர் **சுப்ரதீபக்கவிராயர்**. இவரிடம் அடிகள் முறையாகப் பாடங்கேட்டார். திருக்குறளின் தெள்ளிய நயந் தெரிந்தார். சீவகசிந்தாமணியின் ஓவிய நலன் அறிந்தார். கம்பராமாயணத்தின் கவி இன்பங் கண்டார். பிற பிற நூல்களின் பெருமைகளை உணர்ந்து தெள்ளூற்ற தமிழ்அமுதின் சுவைகொண்டு சிறப்புற்றார்.

திருவள்ளுவரிடத்துப் பெஸ்கியருக்கிருந்த ஈடு பாட்டை அவர் நாயனாரைப் பற்றிக் கூறும் புகழுரை நன்கு புலப்படுத்தும்.

“வள்ளுவன் பயனென்றெடுத்துத் தேற்றப் பொருள் வகைக்கியற்றமிழாய் விரித்துரைப்பப் பதிக மாவது, வேதநூன் முதலெவ்வகை நூலுங் கல்லா துணரவுஞ் சொல்லாதுணர்த்தவும் வல்லவராகி, மெய்ஞ்ஞானத் திருக்கடலாகிய வொருமெய்க்கடவுளுடன் றிருவடி மலரே தலைக்கணியெனக் கொண்டேத்தி யிருளிரா விடத்து விளங்கிய வொருமீன் போலவும் பாலைச் சுரத்தரிதலர்ந்த பதுமம் போலவும் மெய்யாஞ் சுருதி விளக்கா திருளே மொய்த்த நாட்டின்கண்ணுங் கடவுளேற்றிய ஞானத்திருவிளக் கெரிப்பத் தெரிந்துணர்ந் தோங்கு மொரு விளக்கென நின்றுயர்ந்த வள்ளுவர் ....” இது தொன்னூல் விளக்கம் காட்டும் வள்ளுவர் புகழ்ப் படம்.

ஐரோப்பியர் திருக்குறளைப் பயிலக் காரணமாயிருந்தவர் வீரமாமுனிவர். சுவாமிகள் செய்த திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பு திருக்குறளை மேலைநாட்டாருக்கு அறிமுகப்படுத்தியது.

# திருமறைப் போதகர்

வேதியர்கள் போற்றும் வியன்வீர மாமுனியைக்
காதகர்கள் பொல்லாக் கரமிருந்து—நீதமுயர்
நல்லவர்கள் காத்த நவமதனை நன்குணர்வான்
சொல்லுவமென் மேலும் தொடர்ந்து.

திருமீட்பரின் அருட்பணிசெய்ய மேனாட்டிலிருந்து இந்நாட்டிற் கெழுந்த குருமார்கள் பலப் பலர். அவர்களுள் முதன்மையானவர் முதன் நூற்றாண்டிலேயே இங்கு வந்து உழைத்துத் திருமறைச் சாட்சியாக மரித்த **தோமை மாமுனிவர்.** இவர் இரட்சகர்பிரானின் பன்னிரு சீடர்களில் ஒருவர். இவரை அடுத்து இங்கு வந்து அருமையான சேவைவாழ்வு வாழ்ந்து திருமறை பரப்பிய தேசிகர்கள் எத்துணையர்! பதினான்காவது நூற்றாண்டில் **பிரான்ஸிஸ்க் சபை. தோமினிக் சபை** எனும் இரு பெருஞ் சபைத் துறவிகள் நம் நாட்டில் கிறிஸ்து சமயத் தொண்டாற்றத் தொடங்கினார்கள்.

சேசுசபைப் **புனித சவரியார்** 1542 - ம் ஆண்டு கோவாவில் வந்திறங்கினார். பத்து ஆண்டுகளாகப் பரனார் சேவைசெய்து பரகதி அடைந்தார் அவரைத் தொடர்ந்து வந்த தேசிகர்களில் பிரசித்தி பெற்றவர் **ராபர்ட் தெ நொபிலி** எனும் தத்துவ போதகர். இவர் அந்தணருடைய நடையுடை பாவனைகளை அனுசரித்தார். பண்டிதர் பயின்ற சம்ஸ்கிருத மொழியில் வேத விளக்கஞ் செய்தார். பல பிராமணர்களைத் திருமறையிற் சேர்த்தார்.

தத்துவ போதகருக்கு நூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த பெஸ்கி அடிகளார் தமிழர்க்குத் தமிழரான தவ முனிவர். இவர்களுக்கு முன் வந்த அயல்நாட்டுக் குருக்கள் நம்முடைய நாட்டு மொழி, நாகரிகம், கலை, கலாச்சாரம் நடை யுடை பாவனை இவற்றைப் பேணியவர்கள் அல்லர். கத்தோலிக்கம் எந்த நாட்டுப் பண்பாட்டிற்கும் பகையானதன்று. அந்தந்த நாட்டுக் கலை, நாகரிகம், மரபு, பண்பு முதலிய நல்லமைப்புக்களோடு நல்லுறவு கொண்டு அவற்றை நன்கு பேணி வளர்ப்பது என்ற உண்மையைச் செயல் முறையில் நிறுவ வழி வகுத்தவர் தத்துவ போதகர். தம் வாழ்க்கை முறையில் வாழ்ந்து காட்டியவர் வீரமாமுனிவர். 'கிறிஸ்துவம் பறங்கியர் வேதம் என்ற பழிப்புநிலை மாறுதற்கு முக்கிய காரணம் முனிவரின் வீரத் தமிழ் வாழ்வே. நம் நாட்டவரின் கலை, நாகரிகம், பண்பாடு இவற்றைக் கத்தோலிக்கம் பரப்பும் நல்ல சாதனங்களாக ஏற்றுக்கொண்டவர் வீரமாமுனிவர். மக்கள் பேசும் மொழிவழி மெய்வழி பரப்பும் முறைமை கண்டு வெற்றிபெற்ற போதகர் வீரமாமுனிவர்.

அடிகளார்க்குத் தமது அலுவலில் முதல் ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் நிலையான உறைவிடம் இல்லை. பூர்வ காலத்து வேத போதகர்களைப்போலவே பரதேசியாகச் சுற்றித் திரிந்து திருமறைப் போதகம் செய்தார். தொடக்கத்தில் ஒரு சில மாதங்கள் திருநெல்வேலி வட்டத்திலுள்ள குருக்கள் பட்டியில் தங்கினார். பின்னர் தமிழ் நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குச் சென்றார். ஆங்காங்கே புதுக் கிறிஸ்துவர்களை வரவேற்றுப் புதுவாழ்வு அளித்ததோடு பழங் கிறிஸ்துவர்களை உறுதிப்படுத்தி வேதவாழ்வு தழைக்கச் செய்தார்.

1713-ம் ஆண்டு அடிகளார்க்கு ஒரு விந்தையான விபத்து வந்தது. அப்போது அவர் **குருக்கள்பாடி** எனும் இடத்தில் பணிசெய்திருந்தார். ஒரு கயவன் அவரிடத்துஅன்பன்போல நடித்துஅவரைஏய்த்துப் பிழைக்கவுன்னினான். அவனது வஞ்சகம் அறிந்த உபதேசிகர்கள் அவனை அடித்துத் துரத்தினர். அவன் அவர்களைப் பழிவாங்க எ்ண்ணினான். அப்போது மதுரை நாயக்கர் படையினர் வரிவசூல்செய்ய வந்திருந்தனர். கயவன் அப்படையினரிடம்போய் முறையிட்டான். குருக்கள்பட்டிக் கிறிஸ்துவச் சாமியார் தன்னை அடித்து விரட்டியதாய்க் கோள் ஏற்றினான். அவர் ஏராளமாகப் பணம்புதைத்து வைத்திருப்பதாகப் படைத்துச் சொன்னான். அப்படையினர் தலைவன் **எல்லமராஜன்,** சாமியாரையும் அவரது சகாக்களையும் சிறைப்படுத்திவர ஏவலாளரை அனுப்பினான். இரு காலாட்களும் நாற்பது குதிரைவீரர்களும் ஊரைச்சுற்றி வளைத்துக்கொண்டு அடிகளாரையும் உபதேசிகர் இருவரையும் சிறைப்படுத்தினர். வெற்றி பெற்ற வீரரைப்போல் படைத்தலைவன் முன்னர்நிறுத்தினார். துருவிக் கண்ட பொற்பையையும் வைத்தனர்.

சேனாதிபதி **எல்லமராஜன்** பெஸ்கியரிடத்துச் சில கேள்விகள் கேட்டான். பிராமணர்களுக்கும் அவர் போதிக்க விரும்புகின்றாரா என்று உசாவினான். அடிகள் "போதகம் எவருக்கும் உரியது. ஏனெனில் மோட்ச வழியை அறிய எல்லோருக்கும் கடமை உண்டு" என்று சாந்தமாகப் பதில் உரைத்தார். இதனைக் கேட்ட தலைவன் வெகுண்டான். அடிகளார் துணிவாக அளித்த விடைகளைத் தனக்கு அவமதிப்பாகக் கருதிக் கைதிகளை விலங்குகளாற் பிணிக்க உத்தரவிட்டான். ஒரு உபதேசி

கரைச் சித்திரவதை செய்தான். இன்னொருவரிடம் நய வஞ்சகமாகப் பேசினான்; பின்னர் பயமுறுத்தினான். எவரும் துளிகூட அசையவில்லை. முயற்சி பலிக்கவில்லை. கடுஞ் சினங்கொண்ட எல்லமராஜன் அடிகளைக் கொல்லத் தீர்மானித்தான். மறுநாட் காலை மரண தண்டனைக்கு யாவும் தயாராயிற்று. முனிவர் அணிந்திருந்த அங்கி கழற்றப்பட்டது. கழுத்தில் சங்கிலி பிணித்தாயிற்று. கொலை மேடைக்கு அழைத்து வரப்பெற்றார். முரசு முழங்கிற்று. திடீரென அங்கு சில ராஜவம்சக் கிறிஸ்துவர்கள் எங்கிருந்தோ வந்தனர். படைத் தலைவனைப் பார்க்கவேண்டுமென்றனர். அடிகளார் சிறைப்பட்டதை அவர்கள் இருகத்தோலிக்க வீரப்பெண்மணிகள் சொல்லத் தெரிந்து அங்குவந்து சேர்ந்தவர்கள். தங்கள் குரு விடுதலை பெறவில்லை யென்றால் தங்கள் தலையையே கொடுக்கத் துணிந்தனர் வந்திருந்த ராஜ வம்சத்தினர். சேனாதிபதி விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. கைப்பற்றிய பணப்பையில் இருந்தவை பொற்காசுகள் அல்ல. ஆனால் அவைகள் பொன்முலாம் பூசப்பெற்ற சுரூபவட்டங்களே என்று அறிந்ததும் பண ஆசை பிடித்த பட்டாளத்தினர் மிக வருந்தினர்.

இது நிகழ்ந்த இரு வாரங்களுக்குப் பின் உரோம் நகரிலிருந்த தமது சபைத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் "எனக்குக் கொலைத் தீர்ப்புக் கிடைத்தது. வேத சாட்சியின் வெற்றிக்கொடி பெற விழைந்தேன். எனது பாவமே அப்பேற்றை நான் அடையாதவாறு தடுத்து விட்டது என்பேன்" என்று வருந்தி எழுதினார்.

---

## திருக்காவலூர் நிறுவிய தேசிகர்

**திருக்காவல் ஊரைச் சிருட்டித்தும் ஆங்கோர்**
**அருட்காவல் கோவில் அமைத்தும்—பெருக்கார்வ**
**கன்னிமரி தன்மேல் கலம்பகத்தை நன்குரைத்தும்**
**மன்னுபுகழ் கண்டான் மகிழ்ந்து.**

**ஏலாக்குறிச்சி** என்னும் சிற்றூர் **திருச்சிராப்பள்ளி** ஜில்லாவில் **உடையார்பாளையம்** தாலுகாவில் அமைந்தது. அது **தஞ்சாவூரிலிருந்து** சற்றேறக்குறைய பன்னிரண்டு மைல் தொலைவில் இருக்கின்றது. இச் சிற்றூர் இன்று பிரசித்தி பெற்றிருப்பதற்குக் காரணம் இதன் அருகே தேசிகர் பெஸ்கியரால் தோற்றுவிக்கப்பட்ட திருக்காவலூரே என்போம்.

தஞ்சையில் மகாராஷ்டிர மன்னர்களின் வழி வந்த **ஷஹாஜி சரபோஜி** அரசர்கள் 1682-ம் ஆண்டு முதல் 1729-ம் ஆண்டுவரை ஆட்சி நடத்தினர். **ஷஹாஜி** காலத்தில் கிறிஸ்துவர் மிகவும் துன்பப்பட நேர்ந்தது. வெளிப்படையான வேதாநுசாரத்திற்குத் தடை உண்டாயிற்று. சேசுசபை சங்கைக்குரிய **மைக்கேல் பெர்தோலி** சிறை சென்றார். சங்கைக்குரிய **ஜோசப் கர்வாலோவுக்கும்** அதே சிறைவாசம் சித்தித்தது. கிறிஸ்துவக் குருக்கள் **ஷஹாஜியின்** ஆட்சிப்பகுதிகளில் கால் வைக்கக்கூடாதென்பது கண்டிப்பான கட்டளை. 1701-ம் ஆண்டு நவம்பர் 14-ந் தேதி **ஜோசப் கர்வாலோ** சிறையில் உயிர்நீத்தார். பல மாதங்களாகச் சித்திரவதை செய்யப்பெற்ற **பர்தோலி** இறுதியில் விடுதலை பெற்றார்.

கிறிஸ்துவர்களுக்குப் பெரிய சோதனைக் காலம். ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு அடங்கி ஒடுங்கி வாழ

நிர்ப்பந்திக்கப் பெற்றவர் பன்னீராயிரத்திற்கு மேற்பட்டவர். இவர்களின் வேத முறைமைக்குக் குந்தகம் ஏற்படாதபடி ஒரு வழி காணப்பெற்றது. **ஷஹாஜியின்** ஆளுகை எல்லைக்கு அப்பால் **கொள்ளிடத்திற்கு** வடக்கே **அரியலூர்** ஜமீனுக்குட்பட்டது **ஏலாக்குறிச்சி.** அங்கே சேசு சபையினர் ஒரு கோவிலைக் கட்டினர். தஞ்சையிலிருந்த கிறிஸ்துவர்கள் இந்தக் கோவிலைத் தேடி வந்து தங்கள் வேதக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டனர்.

1715-ம் ஆண்டை அடுத்து ஏலாக்குறிச்சியில் கோவில் குருவாகப் பணியாற்றியவர் சங்கைக்குரிய **எம்மானுவேல் மச்சாடோ.** அவர் தமது விசாரணையிலுள்ள தஞ்சை, வல்லம், கூனம்பட்டி முதலிய இடங்களில் வதிந்த தமது ஞான மக்களை விசாரித்து வந்தார். அவர்களை வேதவாழ்வில் உறுதிப்படுத்தும் வகையில் உதவி பல செய்தார். பகைமையைப் பொருட்படுத்தாது செய்துவந்த வீரத்திருப்பணியின் நடுவே அரசினர் கையில் அகப்பட்டுச் சிறை வைக்கப்பட்டார்.

அவருக்குப்பின் ஏலாக்குறிச்சியின் விசாரணையை ஏற்றவர் வீரமாமுனிவர். அவர் 1716-ம் ஆண்டு அங்கு வந்தார். வந்து சேர்ந்ததும் நிகரில்லாத் துணிவுடன் தேவ ஊழியம் தொடங்கினார். அவ்வூரிலிருந்த தெல்லாம் ஒரு சிறு குடிசைக் கோயில். அதுவும் இடிந்து தகர்ந்து இருந்தது.

கோவில் மட்டுமா ? அங்கு வாழ்ந்த கிறிஸ்துவர்களுமே சீர்குலைந்து சிதறி நின்றனர். ஆணவக்காரரின் உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சி உருமாறித் திரிந்தவர் ஒருபுறம். காசு பணத்திற்காகக் கொள்கையை அடகு

வைக்கும் நிலையிலிருந்தவர் இன்னொருபுறம். இயற்கை யல்லன செயற்கையில் தோன்றிக் காவிரிக் கரையிலும் எய்திய கடும்பஞ்சத்தின் கோரத்தாண்டவம் மற்றொரு புறம். கொள்ளை லாபத்தில் குறி வைத்து நவதானியங் களை உள்நாட்டில் விற்காமல் அயல் ராஜ்ஜியங்களுக்கு அனுப்பியவர்கள் அக்காலத்திலும் இருந்தனர். எத் திசை நோக்கினும் இன்னல் இடைஞ்சல், யாண்டும் துன்பப் பெருக்குத் தொடர்ந்து சூழ்ந்தது.

கிறிஸ்துவர்கள் சிதைந்து வருவதைக் கண்ட தேசி கர் கண்கலங்கினார். சிந்தை நொந்தார். தேவ அன்னை யின் துணையைத் தேர்ந்து நாடினார். புதிதாக அழகிய தோர் சிறு கோவிலைக் கட்டினார். மைலாப்பூரிலிருந்த திருமறைத் தலைவரின் இசைவு பெற்று இக்கோவிலில் ஆண்டு தோறும் திருவிழா நடாத்த உறுதிகொண்டார். அருட்காவல் செய்யும் அமலத்தாயின் பெருமை விளங்க அவர் அமைத்த கோவிலைச் சார்ந்த சிறுகுடிக்குத் திருக் காவலூர் என்ற பெயரைப் பொருத்தமுறப் புனைந்தார். வழிவிலகிப்போனவர் பலர் மீண்டும் திருமறை சேர்ந் தனர். பஞ்சத்தால் எழுந்த மக்களின் பசியும் பிணியும் நீங்கின. வசியும் வளனும் சுரந்தன.

பெஸ்கியர் காலத்தில் வாழ்ந்த சங்கைக்குரிய வின்சென்ற் கொரியரோ 1730-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இரண்டாந் தேதி உரோமாபுரிக்கு எழுதிய கடிதத்தில் திருக்காவலூர்த் திருவிழாவைப்பற்றிக் குறிப்பிடுவ தாவது :—

1729-ம் ஆண்டு ஏலாக்குறிச்சித் திருவிழாவுக்கு வந்த மக்கள் தொகை எவ்வளவு என்றால், அந்நாட் களில் வீரமாமுனிவருக்குத் துணைசெய்யச் சுற்றுப்

பக்கங்களிலிருந்து அநேக குருக்கள் வந்தும் ஆயிரக்கணக்கான கிறிஸ்துவர்களின் பாவசங்கீர்த்தனம் நிறைவேற முடியாது போயிற்று. கிறிஸ்துவர்களில் பலர் இருபது அல்லது முப்பது ஆண்டுகளாகக் கோவிலைப் பாராதவர்கள் திருவிழாவுக்கு வந்து நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து அந்நாள் முதல் திருந்திய வாழ்வு வாழ்ந்தனர்.''

இந்தத் தலத்திற்கு அருகில் உள்ள ஒரு பாழ் வயல் பேய்க்காணியாகச் சொல்லப்படும். அது மெய்யோ? பொய்யோ? ஆனால் அந்த வயலில் பயிரிட முனைந்தவர் மரித்தனர். உழுத மாடுகள் மடிந்தன. கிறிஸ்துவர்களில் சிலர், திருக்காவலூர் அன்னையை அகத்திலிருத்தி, ஆழ்ந்த விசுவாசத்துடன் அந்த நிலத்தை உழுது பயிரிடத் துணிந்து வந்தனர். ஒருவருக்கும் ஒரு சேதமுமில்லை. பயிர் செழித்தது. பலன் விளைந்தது. தேசிகர் நிறுவிய இத் திருக்காவலூரைத் தேவ அன்னை பேரருள் கூர்ந்து ஆசீர்வதித்திருக்கின்றாள். அந்நாள் முதற்கொண்டு இந்நாள் வரை இது ஒரு திருத்தலமாக விளங்கிவருகின்றது. பல்லாயிரக் கணக்கான யாத்திரைக்காரர்கள் ஆண்டுதோறும் இங்கு வந்து புனித அன்னையைப் போற்றிப் பயன் எய்துகின்றனர்.

அரியலூர் ஜமீன்தார் **இரங்கப்ப மழவராயர்** வீரமாமுனிவரை நன்கு மதித்தனர். முனிவர் நிர்மாணித்த கோவிலுக்கு வரிசைகள் வழங்கி மகிழ்ந்தார் ராயர் ஒருநாள் முனிவரைக் காண வந்தார். ஒருநாள் இரவும் பகலும் திருமறையைப் பற்றிய உரையாடல் நிகழ்ந்தது. தேசவழக்கப்படி குருவானவருக்குத் தானங்கள் அளித்தார். கோவிலைச் சுற்றிய பரந்த நிலத்தை இனமாகக் கொடுத்தார். அதனை அன்னையின் ஆலயத்

திற்குச் "சந்திர சூரியர் உள்ளளவும்" உரிமைப்படுத்தினர். கல்வெட்டில் காணப்படும் தான சாசனம் வருமாறு :—

"ஸ்வஸ்த ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் ௲௬௱௰௭ இராக்ஷத வரு ஆடி மீ ௨௰௨ ஸ்ரீமது ராஜமானிய ராஜஸ்ரீ அரியலூர் ரங்கப்ப மழவராயர் ஏலாக்குறிச்சித் திருக்காவலூரில் வீராண தேவன் வழிக்குக் கிழக்கு, கோவிலூர் வழிக்கு மேற்குக், குட்டைக்குத் தெற்கு, பெரிய ஏரிக்கு வடக்குக்குட்ப்பட்ட யாவும் சர்வேசுவரன் கோவிலுக்குச் சிலாசாஸனமாகத் தந்தோம். சந்திராதித்தரும் கல்லுங் காவிரியும் புல்லும் பூமியுமுள்ளளவும் சுகமேயிருக்கவும், இந்தத் தருமத்துக்கு யாதாமொருத்தன் விகாதஞ் செய்தால் கங்கைக்கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திற் போகக் கடவான்."

திருக்காவலூர் நிறுவியதோடு மனநிறைவு கொள்ளவில்லை நமது மாமுனிவர். அக்காவலூர்க் கோவிலில் கருணைகூர்ந்தெழுந்தருளிய கன்னிமரியின் பெருமையைக் கலம்பகத்தால் பாடிப் பரவினர். பக்தர் திருக்குழாமும் நாவார வாயாரப் பாடி நலம் பெறச் செய்தார். திருக்காவலூர் இன்று பாடல் பெற்ற தலமாக வீறுகொண்டு விளங்குகின்றது அருள் அரசி அடைக்கலத்தாயின் மாண்பை எண்ணி முனிவர் உள்ளத்தில் கொண்ட மகிழ்ச்சியின் பொங்கலே கலம்பக மலர்ச் சோலையாக முகிழ்த்தெழுந்தது. கற்கோயிலைச் சார்ந்து படர்ந்து கலைக்கொடியாக இலங்கி வருகின்றது.

"சோழவளநாட்டின் ஜீவநதியாகப் பாய்வது 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா' மலைத்தலைய கடற்

காவிரி" இடையருது அலை எழுந்து பேரொலி செய்யும் இப்பெரு நதியின் வடகரையில் பூஞ்சோலைகளாலும் மரியன்னையின் கையிற்பற்றிய சிங்கக் கொடியாலும் நிழல் செய்யப்பெறுவது திருக்காவலூர். இக்காவலூரில் கோயில்கொண்டு கருணையுடன் காவல்செய்வது தாயே! உனது தயை காரணமான செயல் அல்லவோ?" என்று கனிந்து கேட்கிறார் முனிவர்.

கனைபூத்த சோணாட்டுக்
    காவிரியின் வடகரையில்
சினைபூத்த நிழல்பொழில்வாய்
    சிங்கநெடுங் கொடிநிழற்றுந்
திருக்காவ லூரகத்துத்
    திகழொளிவாய் மணிக்கோவில்
அருட்காவல் இயற்றிநமை
    அளிப்பதுநின் தயையாமோ ?

அன்னையின் அருள் திறங்களை அடிகள் உருக்க உணர்ச்சி கொண்டு உரைக்கின்றார். அதுபோழ்து அவர் தம் நாவிலே தெவிட்டாத தீஞ்சுவைச் சொற்கள் கருத்துப் பொலிவுடன் இசைந்து நடமிடுவதைக் காணலாம்.

உயருல கடிதொழு
உயிரினு முவகையை
துயருல குளியுள
துகளொளி உறுதியை
உலகினை அருளிய
ஒருவனை அருளினை
அலகினை அறுவரம்
அமைதனி அரசினை

விளையிடும் இருள் அற
வெளியிடு மறையினை

முனையிடு பகையற
முயலிடும் உடலினை

மறைஅருள் இறைவனை
மறைவில அருளினை

இறையருள் கதியினை
இனிதருள் துணையினை

சுவிசேஷத்தில் காட்சி ஆகமத்தில் புநித அருளப்பர் கன்னி சுத்த தேவ அன்னை திங்களைப் பாதகுறடாகவும் தினகரனை ஆடையாகவும் விண்மீன்களை மகுடமாகவும் கொண்டிலங்கக் கண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அக்காட்சியை உளங்கொண்டு முனிவர் அம்மனைப்பாட்டில் அமைக்கின்ற வகை நெஞ்சை அள்ளும் நீர்மையது.

சீர்த்ததிருக் காவனலூர்த் தேவணங்கு தாட்கமலம்
நீர்த்ததிருத் திங்கண்மேல் நின்றனகாண் அம்மானை!
நீர்த்ததிருத் திங்கண்மேல் நின்றன வென்றுமாயின்
ஆர்த்ததிரு வண்டுவப்ப ஆண்டு அலரா அம்மானை!
போர்த்ததிருச் சோதிஇன்பப் போது அலரும் அம்மானை!

அழகு பொருந்திய திருக்காவலூர்த் தேவதாயின் பாததாமரை குளிர்ச்சி நிறைந்த சந்திரன்மேல் நின்றன. அப்படி நின்றது உண்மையாயின் (தாமரைக்குச் சந்திரன் பகையாகவே) வண்டுகள் மகிழக்கூடிய விதமாக அவள் பாதகமலம் மலர்ந்திருப்பது எப்படி? அவள் ஆடையாக அணிந்திருக்கும் சூரியனது பிரகாச உதவியால் பாதகமலங்கள் எப்போதும் மலர்ந்திருக்கும்.

திருக்காவலூர்க் கலம்பகமேயன்றி அடைக்கல நாயகிமேல் கலிவெண்பா, அடைக்கலமாலை உலா என்ற வேறிரு பிரபந்தங்களிலும் அன்னைமரி தமக்கு அடைக் கலந் தந்து ஆதரித்த செய்தியை மிகுந்த நன்றியறித லோடும் உவகைப் பெருக்கோடும் ஓதுகின்றார்.

இன்பருளிப் பூவிழல்சூழ்
இயைகாவல் ஊரகத்தே
அன்பருளி நீ எனையும்
அடைக்கலங்கொண் டாயலையோ?

அனம் ஆடி விளையாடும் அம்புயமார் வாவியின்றிப்
புனம் ஆடி மதிதாங்கும் புண்டரிக அடிகண்டேன்
தாயேநீ அன்றுசெய்த தயையொருநாள் மறப்பேனோ?
நோயேகொண்டொழியினும் நான் உன்மலர்த்தாளொழிவேனோ?
நான் செய்த தீவினையும் நயந்தருளித் தாயே நீ
தான் செய்த ஆதரவும் சாற்றுது மெந்நாளுமன்றே
மறைநலமுந் தயைக்கடலும் வான்கதிசேர் இருவழியும்
இறைவனையும் என்னுருவோடெனக்கினிதிற்காட்டினையே.

அடிசேர்ந்தேன் கண்டேன் அணிந்தேன் பணிந்தேன்
மிடிதீர்ந்தேன் பேரின்ப வெள்ள—முடியாகக்
குளித்தேன் துதித்தேன் குளிர்ந்தேன் மலர்த்தாள்
துளித்தேன் சுவைத்தேன் சுகித்தேன்—களித்தேனே
காண்டற் கரியனவுங் கண்டேன் கண்டன்பின்
தீண்டற் கினியனவும் தீண்டினனே.

சுவாமிகள் அருளிய வேறு சில பாமாலைகள் இதன் தொடர்பாய்க் குறிக்கத்தகும்.

அந்தாதித்தொடையில் நூறு பாக்களால் அமைந்த **அன்னை அழுங்கல் அந்தாதி**, சேசுபரன் திருப்பாடுகளைக் கண்ட மரியன்னையின் துயரை எடுத்துரைக்கும் தமிழ்

நாட்டில் புராதனமாய் நடிக்கப் பெற்று வரும் திருப் பாடுகளின் நாடகத்திற்காக இந்த அந்தாதி முதலில் இயற்றப் பெற்றதாதல் வேண்டும். சுவாமிகள் இயக் கித்தந்த **கருணும்பரப் பதிகமும் தேவாரமும்** பக்திச் சுவை முதிர்ந்தவை. "பேதையர்க்கு ஓர் அம்மானை பேதையும் நான் பாடிடுவேன்" என்று முனிவர் அவை யடக் கத்தோடு தொடங்கிச் செய்த **கித்தேரியம்மாள் அம்மானை** போர்த்துக்கல் நாட்டு வேதசாட்சியான கித்தேரியம் மாளின் புகழ் பரப்பும் நற்றமிழ் மாலை. அறிஞர்க் கும் விருந்தாகும் அணிநலங்களாற் சிறந்த கவிமணி மாலை. சுவாமிகளுக்குப் புநித கித்தேரியம்மாளிடம் தனிப் பெரும் பக்தி. மணிலாவிலிருந்து இவளது திருச் சுரூபம் தருவித்தார் என்று தெரிகிறது. 1731-ம் ஆண்டு எழுதிய கடிதத்தில் தமது விசாரணையில் கித்தேரியம்மா ளின் பக்தி பரவி வருவதைக் குறிப்பிடுகிருர்.

---

## காப்பியக் கவிஞர்

**கண்டும் கழையும் கனியும் கமழ்நறவும்**
**கொண்டு குழைத்த குளிர்மொழியால்—பண்டைமுனி**
**தேம்பா வணியென்னும் சீரியதோர் காவியத்தை**
**நாம்பாட வைத்தான் நயந்து.**

**க**தை தழுவிய தீஞ்சுவைக் கவிதைத் தொகுப்பே காவியம். இது அகலக் கவி யெனவும் வித்தாரக் கவி யெனவும் பெயர் பெறும் காவியத்தை ஜனரஞ்சகமாக யாத்துத்தரும் பெரும் புலவர் காப்பியக் கவிஞராவர். தாம் கருதிக் கண்ட பெருமகனை தன்னிகரில்லாத் தலை வனின் வீரப் பெருவாழ்வு கொண்டோ சரித்திரங்கண்ட வியத்தகு நிகழ்ச்சி கொண்டோ உலகோர்க்கு உறுதிப்

பொருளை உணர்த்தும் வண்ணம் கவிஞர்கள் காவியங்களை அருள்வர். இளங்கோவடிகள்,

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்

என அகங்கெழுந்த ஆர்வத்தைக் கொட்டியுரைத்தமைத்தார் நெஞ்சை யள்ளும் ஓர் அருங் காப்பியத்தை. காப்பியக் கவிஞரேறு, கம்பர் "ஆசைபற்றி அறையலுற்றேன் மற்றிக் காசில் கொற்றத்து ராமன் கதை அரோ" என்று எத்திக்கும் போற்றும் ராமன் திருக்கதையைத் தித்திக்கும் செந்தமிழில் செய்து வைத்தார். இத்தலி நாட்டிலிருந்து வந்த சுத்த சன்மார்க்க ஞானியும் இவ்வுத்தமக் கவிஞர்களை முன்னிறுத்தியே உள்ளத்தெழுந்த ஆசை காரணமாகத் தாம் எந்தத் திருத்தொண்டர் பெயர்கொண்டிருந்தாரோ அந்தத் திருத்தொண்டர் சீர்பரவுதல் வேண்டுமென்று நோக்கங்கொண்டு வளனார் சூசையப்பரின் காதையை அறமுதல் விளங்கச் சொன்னார். வீரமாமுனிவர் விழைந்து செய்த காவியம் தேம்பாவணி யென்னும் பெயரால் தேம்பாத அணியாக, வாடாத மாலையாகத் தமிழ்த்தாயின் திருமேனிக்கு அழகு செய்து வருகின்றது.

முனிவர் இத்தாலிய, கிரேக்க காவியங்களை இளமையில் பயின்றவர். காப்பியக் கவிஞர்களான ஹோமர் தாந்தே, வர்ஜில் ஆகியோரின் பொருள் வளமும் சொல் நலனும் இசையொழுக்கும் இன்ன பிறவும் அடிகளாரை

ஈர்த்தன. இவற்றில் இருந்த ஈடுபாடு இன்சுவைத் தமிழ்க் காவியங்களான சிந்தாமணி, ராமாயணம் ஆகிய நூல்களிலும் தொடர்ந்து நிகழ்ந்தது அதிசயமல்ல. தமிழ்க் கவியமுதத்தில் திளைத்த சுவர்மிகள் தாமும் ஒரு காவியஞ்செய்யக் கருத்துக் கொண்டதில் வியப்பில்லை. சொல் விற்பன்னமும் அவதானமும் அவருக்கு இயல் பாய் அமைந்திருந்தன. இப் பேரியல்புகள் கவிசொல்ல வல்ல நல் வித்தையை அவருக்கு நல்கின.

இஸ்பானிய நாட்டில் ஆகிர் என்பது ஒரு சிற்றூர். அதில் சேசுபரனிடம் பக்தி பூண்டிருந்த மரியென்னும் பாவை நல்லாள் தன் கன்னிமையைக் கர்த்தர் திருப் பணிக்கு அர்ப்பணித்த துறவி. அவள் இறைவன் திரு வருளால் சூசையப்பரின் தூய வரலாற்றை எழுதினாள். இவள் எழுதிய நூலே நம் புலவர்க்கு முதல் நூலாய் அமைந்தது என்பது தேம்பாவணிப் பாயிரத்தால் தெளி வாகும். பெருமித வனப்பு. பொன்னனைய சொன்னயம், கேட்போர் வேட்பத் துணிந்தாக்கிய வாக்கின்போக்கு சிந்தைக்குகந்த சந்த வின்பம் காட்சித் திறன்படைத்த கற்பனைப் பொலிவு ஆகிய பண்புகளால் நிறைந்த தேம்பாவணி பழந்தமிழ் உயர் காவியங்களோடு பெரி தும் ஒப்புமை உடையது. முனிவர் இயற்றிய நூல்களி லெல்லாம் சிறந்ததாய் முன்னிற்கும் தன்மையது. நம் மொழியிலன்றி எம்மொழியிலும் உள்ள உலக காவியங் களில் மிகச் சிறந்தவற்றுள் ஒன்றென மதிக்கத்தக் கது. ஒரு மகாகவிக்கு வேண்டிய கல்வியின் சக்தியும் காட்சியின் சக்தியும் சிந்தனைச் சக்தியும் சிருஷ்டி சக்தி யும் மாமுனிவரிடம் பொருந்தியிருந்தன "படித்த நூலவை பயன்பட விரித்துரைக்கும் பாங்கின்படியும்

"முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றுவம்" என்ற நியதியின்படி யும் வீரமாமுனிவர் தம் காவியத்தில் புறம், குறள், சிலம்பு, நாலடி, சிந்தாமணி, ராமாயணம் முதலிய நூல் களின் மொழியைக், கருத்தை, இசையைக் கலந்து தரத் தயங்கவில்லை. இத்தாலியக் கவிஞன் த்ாசோவின் (La Gersalemme Liberata) தேம்பாவணியின் இருபதாம் படலத்திற்குத் துணை நூலாயிற்றென்க. மேலை நாட்டுக் கலையாறும் கீழை நாட்டுக் கலையாறும் கலந்து வெள்ள மெனப் பாயும் தமிழ்ப் பேராற்றிலே தேம்பாவணிக் காப்பியப் படகுதனை மகிழ்ந்து செலுத்துகின்றார் நம் முனிவர் பெருந்தகை.

தேம்பாவணி வளனார் காதை சொல்லும் காப்பி யம் மட்டும் அன்று. அது அறம் பொருள் இன்பம் வீடு எனும் உறுதிப் பொருள் காட்டும் வாழ்க்கை ஓவியம், ஞான உபதேசத் தடாகம். நன்னெறிக் கண்ணாடி அறம், மறம், கதிபற்றிய வினாக்களுக்கு விடையளிக்கும் இட மான பயிற்சிக்கூடம் திருமறை ஆராய்ச்சி மாடம். இறைவன் இயல்பையும் மெய்ம்மறையின் தன்மையை யும் எடுத்துமொழியும் தத்துவக் கலைப்பீடம். சிருங்கார ரசத்தின் பேரால் சிற்றின்ப லீலா விநோதக் கட்டுக் கதைகள் மலிந்த காவியங்களால் விளையுங் கேட்டை உணர்ந்த முனிவர் அமிர்த சரிதையும், அரிய காட்சி களும் அமையத் தந்த அரிய காவியம். பெருங்காப்பியப் புலவர்களான ஹோமரும் வால்மீகியாரும் கம்பரும் நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே நிகழ்த்தவில்லை. உள்ளோன் தலைவனாக உள்ளது கூறவில்லை. இல்லோன் தலைவனாக இல்லது கூறினார் என்றும் இல்லை. இல்லதும் இனியதும் நல்லதும் புனைந்துகூறும் பான்மையில் வீரமாமுனி

வரும் அடிப்படையான சரித்திரங்கொண்டு தம் மனோ ரதத்திற்கேற்பக்காவியத்தை விரித்துரைத்திருக்கின்றார்.

தேம்பாவணி மூன்று காண்டங்களாக, முப்பத் தாறு படலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. கம்பராமா யணத்தில் உள்ளதுபோலத் தேம்பாவணியில் காண் டங்களுக்குப் பெயரில்லை. ஆனால் படலங்களுக்குப் பெய ருண்டு. படலம் ஓதும் பொருளுக்கேற்பப் பொருள் அமையப்பெற்று வரலாற்று முறையே வைப்பு முறை யாக இயலுகின்றது. தமிழ் மரபு வழாதபடி பாயிரத் தோடு தொடங்குகின்ற இப் பனுவல் பலஸ்தீன் நாடு, ஜெருசலேம் நகரம் ஆகியவற்றின் வளங்களை முத லிரண்டு படலங்களில் வகுத்துக் காட்டுகின்றது. மூன் றாங் காண்டம் வளன் பிறப்புப் படலம். வனஞ்சென்ற வளன்முன் வானவன் தோன்றி அவர் கானகம் செல் லாது உலகிலிருந்து பற்றற வாழும் முறை தெரிவித் ததை நான்காம் படலம் நவிலுகின்றது, சூசை மரியினை ஈரறம் பொருந்திய ஓரற வாழ்க்கையை ஐந்தாம் படலம் அறிவிக்கின்றது. ஆறாவது ஏழாவது படலங் களில் அன்னாரின் பரிசுத்த வாழ்வும் கன்னி மரியாளிடம் சுவாமி பிறக்கப் போவதைக் கபிரியேல் தூதன் தெரி விப்பதும் வளன் கவலையும் சொல்லப்படுகின்றன. உளங் கவன்ற வளனார்க்கு கபிரியேல் உற்றதுரைக்க அவர் மனக்கவலை தீர்ந்து மகிழ்ந்து அவரும் மரியாளும் ஒருவருக்கொருவர் தளராமல் பணியாற்றுவது எட்டா வது ஒன்பதாவது படலங்களில் பார்க்கலாம். அடுத்த இரு படலங்களில் கர்த்தர் பிறப்பு, வளன் மரியன்னை மகிழ்ச்சி, ஆட்டிடையர் ஆராதனை, அரபிய பாரசீக மன்னர்களின் வணக்கம் இவற்றைப் புலப்படுத்துகின்

றன. பன்னிரண்டாம் படலம் கர்த்தரைக் கோவிலில் காணிக்கையாகக் கொடுத்ததைப் பற்றிய படலம். இத்துடன் முதற் காண்டம் முற்றும்.

பரிசுத்த குடும்பம் எகிப்து நாட்டிற்குத் தப்பிப் போகும்படி வானவர் எச்சரிப்பதைப் பதின்மூன்றும் படலத்தில் பார்க்கின்றோம். அடுத்த ஏழு படலங்களில் திருக்குடும்பம் எகிப்து நோக்கிச் செல்லுவதும் அங்கு வாழ்வதும் விவரிக்கப்படுகின்றன. எகிப்து நாட்டு வழி நடையில் அவ்வந்நாட்டு வரலாறுகள் ஆங்காங்கே கூறப்படுகின்றன. பரிசுத்த குடும்பத்தினர் பேய்களை வெல்வதும் பெத்லகேமில் எரோதன் மாசற்ற குழந்தைகளைப் பலி யிடுவதும் பால சேசு ஸ்நாபக அருளப்பரின் வாழ்க்கையை முன்கூட்டி அறிவிப்பதும், சூசையப்பர் போதனையும், சிறு தெய்வ வணக்கம் கண்டனமும் வாமன் நாகவன் சன்மார்க்கஞ் சேர்வதும் தேவ பூத வேறுபாடுகளின் விளக்கமும் இருபத்தொன்பதாம் படலம் முடிய எடுத்துரைக்கப் பெறுகின்றன. முப்பதாவது படலத்தில் திருக்குடும்பம் எகிப்திலிருந்து திரும்புவது கூறப்படுகின்றது. அடுத்த படலம் காணாமற் போன இளஞ் சேசு கண்டுபிடிக்கப் பெற்றதைக் காட்டுகின்றது. சூசையப்பரின் இறுதிக்காலம் பற்றிச் சொல்லப்படும் படலங்கள் முப்பத்து மூன்றும் முப்பத்து நான்கும். முப்பத்தைந்தாம் படலம் இருட்டறையில் உள்ள மூதாதையர்க்கு ஆண்டவர் உத்தானத்தின்பின்தோன்றுவது சொல்லப்படுகின்றது. முப்பத்தாறுவது படலத்தில் பிதாப் பிதாக்கள் கிறிஸ்து பெருமானோடு வானுலகம் செல்வது கூறப்படுகின்றது. இக் கடைசிப் படலம் வளனுர்க்கு வான்முடி சூட்டுவதையும் காட்டும்.

காப்பியத் தலைவர்தம் வளநாட்டின் வானோங்கிய பெருமையைப் புலவர் வாயார நாவாரப் புகழ்ந்து களிக்கின்றார். நம்மையும் அக் களிப்பில் கலந்து களியக் காட்சிகளைச் சித்திரிக்கின்றார். யாங்கணும் ஓங்கிய பொழில்கள் அந்நாட்டில் பாங்குறத் தோன்றும். சோலைகளில் உயர்ந்து வளர்ந்த மரங்களின் கிளைகள் மேகத்தை ஊடுருவும் தன்மையன. மரங்களில் மலர்கள் பூத்துக் குலுங்கும். அம் மலர்கள் சொரியும் நறுந்தேன் அத் திருநாட்டில் எவ்விடத்தும் பாயும். கதிரவன் ஒளி புகாச் சோலைகளின் பெருக்கத்தால் எங்கும் இனிமையுங் குளிர்ச்சியும் நிலவும்.

விண்புதைத்த மலர்ப்பணைவாய்
விரைகுளித்த தேன்ஒழுகி
கண்புதைக்கும் இருட்பொழில்கள்
களிகூர்ந்த நாடிதுவே.

இந்நாட்டு மலையை விண்ணாட்டுக்கு எடுத்துச் செல்லக் கருதி வானவர் இட்ட வடம்போல மழைத் தாரைகள் மாண்புறத் தோன்றுமாம். அங்ஙனம் எடுத்துச் செல்லா வண்ணம் பிணித்துக் கட்டிய சங்கிலிகள்போல அருவிகள் அமைந்திருக்குமாம்.

புள்ளிமால்வரை பொன்னுல
கிடத்தெடுத் துய்த்தல்
உள்ளிவான்விடும் வடமெனத்
தாரைகள் ஒழுக
வெள்ளி நீள்தொடர் விசித்ததைப்
பிடித்தெனச் சூழத்
துள்ளிவீழ் உயர் தூங்கிய
அருவியின் தோற்றம்.

யூதேயா நாட்டின் ஜீவநாடியாக விளங்கும் நகரம் ஜெருசலேம் நகரம். மழை முழக்கமும் கடல் முழக்கமும் பின் போகும்படி அங்கே கொடை முழக்கம் அதிர்கின்றது. அந்நாட்டில் வாழும் மக்கள் எல்லோரும் எல்லாப் பெருஞ் செல்வம் எய்தியவர்கள். யாசகம் பெறுவாரைக் காணாத குறையின்றி ஆங்குப் பிறிதோர் குறையில்லை. அவ் வளநகரில் செல்வம் செழித்திருந்தது; அறம் தழைத்திருந்தது. அங்குத் திருடர் பயமும் இல்லை; தீயர் பயமும் இல்லை; கள்வர் பயமும் இல்லை; கயவர் பயமும் இல்லை. அந்நகர மக்கள் விழைந்து வாழ்வதற்கு உகந்த இடமாக இலங்கும் பொன்னகரம்.

தெள்வாருரை முகிலுங்கெட
திரையுங்கெட முகியா
வள்வார் முரசதிர் மாநகர்
வயின் வாழ்பவர் கொடையைக்
கொள்வாரில குறையல்லது
குறையில்லதும் எனவே
கள்வாரில; கடையாரில
கழிவாரில நயவார்.

மேலும் அந்நகரில் நீரின் அலைச்சல் இருக்குமே தவிர வேறு அலைச்சல் இராது. வேலைக்காக அலைவது வெட்டியாக அலைவது இந்த மாதிரியான அலைச்சல்களெல்லாம் இரா. நீரின் அலைச்சல் கூறினாராகவே வளங்களிற் சிறந்த வளங் கூறினார். பிறவளங்கள் இதற்குள் அடங்கின. நீர் வளத்தால் நிலவளம் பயிர் வளம் செழிக்குமென்பது கருத்து. நிறைவான் பொருள் இடுவார் போரல்லது பகையில்லது என்றார். உயர்ந்த பொருளைத் தானமாகக் கொடுப்போர் இன்னும் அதிகமாகப் பெறுக

என்பதாலும் பெற்றுக்கொள்வோர் போதும் போதும் என்பதாலும் இருவருக்குமிடையே உண்டாகின்ற இச் சண்டை தவிர அந்நகரில் வேறு எச்சண்டையும் இல்லை. எத்தகைய உயர்ந்த இலட்சிய மக்கள் அங்கு வதிவோர்! வானத்தில், மழை மேகத்தில் கறுப்பு இருக்குமே தவிர மக்கள் மனதில் கறையிரா தென்பது "புரிவான் மழை பொழியும் காரல்லது கறையில்லது" என்பதால் பெறப்படும் "அறனல் சீரல்லது சிறையில்லது," மக்கள் தமது உள்ளத்தைக் காக்கத் தாம் அமைத்துக்கொள்ளும் அறவேலி தவிர வேறு சிறை வேலி இல்லையென்றால் அந் நகரத்தில் வாழும் மக்கள் எத்துணை பண்பட்ட உள்ளம் படைத்தவர்களாக இருக்கவேண்டும்!

நீரல்லது அலையில்லது நிறைவான் பொருளிடுவோர்
போரல்லது பகையில்லது புரிவான் மழைபொழியும்
காரல்லது கறையில்லது கடிகாவலும் அறனல்
சீரல்லது சிறையில்லது திருமா நகரிடையே.

இன்பப் பேரொளியாகிய இறைவன் தங்கி அருள் சுரக்கும் ஆலயம் தூய்மையான இடம் தெய்வ வழிபாட்டுக்கு உரிய இடமாக ஜெருசலேம் நகரத்து மக்கள் அமைத்துக்கொண்ட தேவாலயத்தின் வனப்பு கண்டோர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் பெற்றியது. ஏன்? ஆலயம் அமைத்த நன்மக்கள் தம் உள்ளங்கவர்ந்த வள்ளலாகிய கடவுளுக்கு உறைவிடம் உருவாக்குகின்றோம் என்ற உயரிய எண்ணத்தோடு ஒப்பனை செய்கின்றார்கள். வெள்ளியாலும் பொன்னாலும் மணியாலும் பிற அணியாலும் ஒளிரச் செய்கிறார்கள். அழகுக்கு அழகான ஆண்டவனுக்கு உயிரோவியமாம் திருக்

கோயில் சமைக்கின்றார்கள். இவ்விதம் சமைக்கப்பெற்றச் சித்திரப் பொன்னாலயமே ஜெருசலேம் ஆலயம். இதனைக்காண்பவர் அது அலங்கரிக்கப்பெற்றமுடியோ? அம் முடியிற் பதித்த எழில் மணியோ? வானில் விளங்குஞ் செஞ்சுடரோ? புனிதமான உடலின் உயிரோ? அதன் முகமோ? முகத்தின் கண்ணோ? என்று அதிசயித்துக் கேட்டுச் செயல் மறந்து சேவிப்பார்கள்.

"மண்ணிய முடியோ? முடியின் மாமணியோ?
வானிடை வயங்கு செஞ்சுடரோ?
புண்ணிய உடலத் துயிர்கொலோ? முகமோ?
பொலன்முகக் கண்களோ? யாதோ?
கண்ணிய அளவற்றிடமெலாம் நிறைந்த
கடவுள்தான் உறைந்தருள் காட்டப்
பண்ணிய அம்மா நகரிடைப் பகலைப்
பழித்தெரி பரந்த ஆலயமே.

மக்கள் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் ஒளி காட்டியாகவும் புகழ் பூக்கத் தோன்றியவர் வளனார் சூசை. அவரது வாழ்க்கை அன்பில் கிளைத்தெழுந்தது. அன்பில் செழித்தது. அன்பிலேயே தோய்ந்து தோய்ந்து வலிமை பெற்றது. இதனை நினைவூட்டும் முகமாக எழுந்த சூசையின் குணச்சித்திரத்தில் அன்பின் நலம் உணர்ந்த அண்ணல் சூசையப்பர் அன்பினால் எவர்க்கும் இன்பநிலையாய் இருந்தார் என்பதும் துன்பத்தால் வதங்கிய மக்களின் துயர் துடைத்தார் என்பதும் நன்கு புலப்படுத்தல் பெறுகின்றன.

அன்பு வாய்ந்த உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோலுடல் போர்த்ததென் றன் புறை
இன்பு தோய்ந்த நிலை எனத்தானிவண்
துன்பு காய்ந்த உயிர்த்துணை யாயினான்.

வேதாகம வரலாறுகளை முனிவர் தம் தேம்பாவணியில் காவியச் சுவை கெழுமிய ஓவியங்களாக வரைந்து காட்டு கின்றார். அக்காவிய ஓவியங்களுள் தாவீதன் கோலியாத் சண்டையும் ஒன்று. கோலியாத் இரக்கமில்லாத அரக்கன். பெரிய குன்றோ பூதமோ என்று கண்டார் அஞ்சும் உடல் திண்மையன். ஆனால் ஆன்ம வன்மையற்றவன். உளவலிமைக்கு உயிரூட்டும் தெய்வ சிந்தனை இல்லாத தீயன். தெய்வ நிந்தனையே பேசும் வாயன். கடவுள் அடியார்களான இசரவேலரை இவன் இகழ்ந்தான். போர் செய்யவும் எழுந்தான். இவனை எதிர்த்து அயர்ந்த சவுல் மன்னனின் குடிகளில் யுத்தத்திற்கு அனுப்பப்பட விரும்பிய இளைஞனே தாவீதன். அவன் கடவுள் ஆசி பெற்றுப் போருக்கு விரைந்து வருகின்றான். கோலியாத் அச்சிறுவனை உற்று நோக்கினான்.

நீ அடா எதிர் நிற்பதோ ?
மதம்பொழி கரிமேல்
நாயடா வினை நடத்துமோ ?
கதங்கொடு நானே
வாயடா பிளந் துயிர்ப்பிட
மறுகிநீ நுண்தூள்
ஆயடா உலகப்புறத்
தேகுவாய் என்றான்,

இந்த அடாவடித்தனமான பேச்சைக் கேட்டு இளைஞன் மனந் தளர்ந்தானில்லை. தருணமறிந்து உதவும் தயாபரனது துணைநலங் கொண்ட தூயோன் தாவீதன், "கடவுளின் வலக்கை கொண்டு உன்னை மாய்ப்பேன்." என்று உறுதியோடு பதில் இறுத்தான். திடுமெனக் கவண் வீசி அச்சழக்கனை அரக்கனைச் சாய்த்தான்,

எப்போது தாவீதன் கவணில் கல்லை ஏற்றினான்? எவ்வாறு சுழற்றினான்? எங்ஙனம் வீசினான்? என்பதைச் சூழ்ந்து நின்ற எவரும் அறியவில்லை. கல்லடித்த ஓசை கேட்டனர். கோலியாத் மலைபோல வீழக் கண்டனர்.

கல்லை ஏற்றலும் கவணினைச்
சுழற்றலும் அக்கல்
ஒல்லை ஓட்டலும் ஒருவரும்
காண்கிலர் இடிக்கும்
செல்லை யொத்த சிலைநுதல்
பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்திருள் இரிந்தென
வீழ்தலுங் கண்டார்.

இது இராமபிரான் வில்லொடித்த திறங்கூறிய விடத்துக் கம்பர் சொன்ன

"தடுத்திமை யாமல் இருந்தனர் தாளின்
மடுத்ததும் நாணை வைத்ததும் நோக்கா
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது காண்பார் இற்றது கேட்டார்"

என்ற செய்யுளோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

தேவ அன்னையும் சூசையப்பரும் பன்னிரு வயதில் காணமற்போன கர்த்தரைத் தேடி அலைகின்றார்கள். அன்னையின் கவலை யறிந்த ஒரு காரிகை அவள்பாற் சென்று "அம்மா உன் மகன் எத்தகையவன்? அடையாளஞ் சொல்" என்றாள். அப்பொழுது மாதா தன் திருக்குமாரனை வருணித்துச் சொல்வதாக அடிகள் அருளிய செய்யுள் திருக்குமாரனின் குணவடிவத்தின் இலக்கியப் படமாக இலங்குகின்றது.

பாவி தந்த மகற்குரி பான்மைகேள்
வாவி தந்த தண்டாமரை வாயினன்
காவி தந்த களிப்புமிழ் கண்ணினன்
ஆவி தந்த அருவருட் சொல்லினன்.

பானுயிர்த்த கதிர்ப்படப் பங்கியான்
வானுயிர்த்த மதிப்பட நெற்றியான்
தேனுயிர்த்த முல்லைச்சிறு மூரலான்
கானுயிர்த்த மலர்முகக் காமரான்.

பொருளில் வீங்கிய பொச்சைப் புயத்தினன்
அருளில் வீங்கிய ஆர்கலி மார்பினன்
தெருளில் வீங்கிய சீர்முகிற் கையினன்
சுருளில் வீங்கிய தோடலர்த் தாளினன்.

ஈரஞ்சாம் வருடத் திரண் டாண்டுளான்
நீரெஞ்சா அருளான் நிறை மாட்சியான்
காரஞ்சா வொளி காட்டிய காட்சியான்
சீரெஞ்சா வுரை வெல்லுயர் சீர்த்தியான்.

முகத்தின் தாமம் முகிழ்ந்தெனப் பார்த்தகால்
அகத்தின் தாமரை யுள்ளவிழ் கண்ணினன்
செகத்தின் பாசறை தேய்த்துள பின்புறச்
சுகத்தின் தாய்வினை துற்றிய வன்பினன்.

தனித்தனிப் பாமலர்க் குவையே சங்க இலக்கியம். தொடுத்தமைந்த பாமாலைகள் காப்பிய நூல்கள். இவை சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து எழுந்தவை. இவை தொடர்நிலைச் செய்யுள் எனவும் கூறப்படும். தமிழகத்தில் காப்பியக் கலைக்கோவிலை சைவரும் சமைத்தனர்; வைணவரும் சமைத்தனர்; சமணரும் சமைத்தனர்; பௌத்தரும் சமைத்தனர்; கிறிஸ்துவரும் சமைத்த

னர்; இஸ்லாமியரும் சமைத்தனர். அவரவர் தத்தம் சமய அன்பு மேலீட்டால் பாங்குற அமைத்தனர்.

கிறிஸ்துவ சமய அன்பில் விளைந்த ஆரமுதமாகிய தேம்பாவணி நவில்தொறும் நவில்தொறும் நவ நவமான நயங்காட்டும் செவிநுகர் செய்யுட்கனிகளின் சேகரம். கற்போர் உளங்கொண்டு மூழ்கி வாழ்வின் உருவும் திருவும் நலனும் அகங்கொண்டு காணுதற்கிடமான சாகரம். ஒன்பான் சுவை மருவிய ஓவியக் கருத்துரைகளின் ஆகரம்.

தமிழ் உலகத்திற்குத் தேம்பாவணியைக் கண்டெடுத்துக் கொடுத்தவர் **காலேஜ் முத்துசாமிப் பிள்ளையவர்கள்** ஆவர். இவர் அதனை **ஏலாக்குறிச்சியில்** கண்டெடுத்தனர். அது சிலகாலம் **தாசில் அருளானந்தம் பிள்ளையவர்கள்** வசத்தில் இருந்தது. பூசை மந்திரம் வீட்டில் சொல்லும்போது அந்த நூலை மிக்க பூச்சியத்துடன் சுரூபத்து மாடத்தில் வைப்பார்களாம்.

தேம்பாவணிப் பதிப்பில் காணப்படும் பொழிப்புரை வீரமாமுனிவர் இயற்றியதாகக் கருதப்பட்டு வந்தது. அது தவறான கருத்து என்பதற்குத் தக்க சான்றுகள் **தேம்பாவணி ஆராய்ச்சி** நூலில் உள்ளன.

பிறசமயப் புலவரும் தேம்பாவணியைப் பாடஞ் சொல்லும் அளவுக்குப் பயின்றூர்கள் என்பதும் அதன் நயங்களை அறிந்து நன்கு அனுபவித்தார்கள் என்பதும் துண்ணளியோடு அந்நூலைப் போற்றினூர்கள் என்பதும் **மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்** போன்றூர் வாழ்க்கையிலிருந்து பெறப்படுவன. புதுவைப் பாவலர் **சவராயலு நாயகர்** மகா வித்வானிடம் தேம்பாவணியையும் திருக்காவலூர்க் கலம்பகத்தையும் முறை

யாகப் பாடங்கேட்டு வந்தார். இதைப்பற்றிச் சிலர் குறைகூற முற்பட்டபோது மீனாட்சி சுந்தரனார் "நான் தேம்பாவணியைப் பாடஞ் சொல்லுதலும் கிறிஸ்துவர் முதலிய பிறமதாணவர்கள் என்பாற் பாடங்கேட்டலும் கூடாத செயல்களென்று சிலர் சொல்லி வருவதாகத் தெரிகின்றது. தமிழ் நூல் யாதாயிருப்பினும் அதி லுள்ள சொற்பொருள் நயங்களை உணர்தல் பிழையா காதே" என்று தீர்க்கமாகத் தெரிவித்தார்கள்.

---

## இலக்கணப் புலவர்

**குட்டித்தொல் காப்பியமாய்க் கொண்டடைந்த தொன்னூலும்**
**தட்டில்அக ராதிகளும் தந்தனபின்—ஓட்டி**
**வழுத்திஞன் செந்தமிழ்க்கும் மற்றுங் கொடுந்தமிழ்க்கும்**
**எழுத்துநூல் நன்கே இசைத்து.**

**சிவஞான முனிவரை** வடநூற் கடலும் தென்னூற் கடலும் நிலைகண்டுணர்ந்த சிவஞான முனிவரென்று பொருத்தமுறப் போற்றுகின்றோம். வீரமாமுனிவர் ஒன்பதுக்கு மேலான மொழிநூற் கடலில் மூழ்கி விளை யாடிய சதுரர். சுவாமிகள் தமிழ் இலக்கியத்தின் நிலை கண்டுணர்ந்தார். தாம் ஆழ்ந்து கற்ற பிறமொழிக ளோடும் ஒப்புநோக்கி உணர்ந்தார். இலக்கியங் கண்ட தற்கு இலக்கணம் இயம்ப எண்ணினார்.

நமது மொழியையும் அதன் சிறப்பியல்புகளையும் நாம் காண்பதைக் காட்டிலும் பிறமொழியாளர் கூர்ந்து கவனிப்பது இயல்பே. தத்தம் மொழி இலக்கிய இலக் கணங்களில் பயிற்சி மிக்காராகிய அன்னார் நம் மக்களோடு பழகி நமது மொழியின் உலகவழக்கையும் செய்யுள்

வழக்கையும் உற்றுநோக்கி மொழிகளிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நுணித்தறிந்து புலப்படுத்தினர். "செந்தமிழுணர்ந்தோர் வழியேயின்றிப் புறநடையாய்ச் சில விகற்பம் புறநூல் வழியே சென்று காட்டுதும்" என்கிறார். பொருளியலைப்பற்றிய பழைய இலக்கணங்கள் சிற்றின்பம் படைச் சேவகத்திற்கே விதிகள் தருகின்றன. வழக்கு தேற்றம் தோற்றம் என யாவற்றிற்கும் முனிவர் விதிகள் தருகின்றார்.

வீரமாமுனிவர் இயற்றித்தந்த இலக்கண நூல்கள் நான்கு. இவை (அ) **கொடுந்தமிழ் இலக்கணம்.** (ஆ) **செந்தமிழ் இலக்கணம்.** (இ) **தொன்னூல் விளக்கம்.** (ஈ) **கிளாவிஸ்.**

**கொடுந்தமிழ் இலக்கணம்** :—இது இலத்தீன் மொழியில் எழுதப்பெற்றது. இது ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. முனிவர்காலத்துப் பேச்சுவழக்குத் தமிழின் இயல்பை அயல்நாட்டவர்க்கு விளக்குமுகமாக எழுதப்பெற்றது இந்நூல். பதினேழு ஆண்டுகளாகத் தமிழைப் படித்துப் பயின்றதன் விளைவாக எழுந்த இந்நூல் பிற்காலத்தில் **ரெவரன்ட் ரீனியஸ் பாதிரியார்** எழுதிய இலக்கண நூலுக்கு அடிப்படையாயிற்று.

**செந்தமிழ் இலக்கணம்**:—இது இலத்தீன் மொழியில் எழுதப்பெற்றது. **பாபிங்டன்** என்ற பெரியார் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1822-ம் ஆண்டு வெளியிட்டார். இது எழுத்து, சொல், யாப்பு என்ற முப்பிரிவுகளை உடையது. "மூதறிவின் ஆராய்ச்சித் திறத்தால் எழுதப்பெற்ற இந்நூல் சாலவும் போற்றத்தக்கது" என்பது புலவர் **போப்பையர்** இதனைப்பற்றிக் கூறும் புகழுரை.

**தொன்னூல் விளக்கம்** :—இது **குட்டித் தொல்காப்பியம்** என்று புலவர் பாராட்டும் புகழுடையது. முன்னூல் விளக்கிய தொன்னூல் விளக்கம் என்ற புகழ்மாலை பெற்றது. மதுரைப் புலவரிடமிருந்து திருமதுரைச் செந்தமிழ்த் தேசிகர் என்ற பட்டப்பெயரை முனிவர்க்குப் பெற்றுத்தந்தது. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் ஆகிய முக்கூறுகளே உளவாகத் தொன்னூல் விளக்கத்தில் இம் முக்கூறுகளோடு யாப்பும் அணியும் சேர்த்து முந்நூற்றெழுபது மேற்கோள்களோடு கூடிய எண்ணூற்று ஐம்பத்தைந்து சூத்திரங்களில் ஐந்திலக்கண நிறைவைக் காண்கின்றோம். முதல் இரு கூறுகளேயுள்ள நன்னூலில் நானூற்றைம்பத்தாறு சூத்திரங்களில் அடக்கியதை முனிவர் தம் நூலில் நூற்றிரண்டு சூத்திரங்களில் அடக்கிவிட்டார்.

தொன்னூல் விளக்கத்திற்கு உரை எழுதியவரும் முனிவரே என்பது பொதுப்பாயிரமும் அதன் விளக்கவுரையும் எழுதிய ஒரு கற்றுச்சொல்லி அதன் முடிவில் "இனி வரும் சூத்திர விதியும் உரையின் விரிவும் மாமுனி தரவே" என்பதால் விளங்குகின்றது.

அருட்கலை ஞோர்முத் தமிழ்நூல் உரைத்த அறமுதனல்
பொருட்களை ஆய்ந்துழி வல்லோர் தெரித்த புதைபொருளின்
மருட்களை நூக்கிப் பொருட்பயன் சூட்டி வழுத்துதலால்
**தெருட்குரு** நாமம் தொன்னூல் விளக்கிற்குச் சிறந்ததுவே,

என்ற பழம்பாட்டால் தொன்னூலுக்குக் கலைவல்லார் "**தெருட்குரு**" என்ற பெயர் சூட்டிப் போற்றினர் என்று தெரியவருகின்றது. இலக்கியச் செய்யுள் உதாரணத்தோடு இலக்கணச் சூத்திர மேற்கோள்கள் ஐந்நூற்றுப் பதினைந்தையும் புதுச்சேரி **வேதகிரி முதலியார்**

சேர்த்துவிட்டபடியால் முனிவர் இளந்தமிழ் உரையால் வெளிப்பொருளாக்க நினைத்த நூல் பெருத்தும் கனத்தும் இருக்கின்றது.

"ஒளிவிடா மூடின தீபத்தால் பயனில்லை என்பது போல முன்னோர் தந்த இலக்கண நூலெல்லாம் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக்கிடப்ப இக்காலத்து அவ் விளக்கொளியைக் காண்பாரில்லாது அவற்றிற் கொரு பயனில்லை. தென்மொழியார்க்கும் வடமொழியைத் தாம் உணர்த்தக் கருதின் அவர் முன்னறிந்த தமிழ்ச் சொற் கொண்டல்லவோ வடமொழிப் பயனை உணர்த்தவேண்டும்? ஆகையால் மூத்தோர் புதைத்த நூல் நலம் விளங்கவும், கல்லாதவரும் பயன்கண்டு உணரவும் நானே அதன்மேற் கவிந்த போர்வையினை நீக்கி அறிஞர்முன் கொளுத்தின தீபம் எவர்க்கும் எரிப்பக் கையினில் ஏந்தினாற்போல அவர்முன் செந்தமிழ் மொழியால் மறைத்த இவ்விலக்கண நூலை இளந்தமிழ் உரையால் வெளிப்பொருளாக்க நினைத்தேன்" இது சிறப்புப் பாயிரத்தில் வீரமாமுனிவர் கூறும் செய்தி. இதுகொண்டு யாவருக்கும் புலப்படும் இளந்தமிழ் உரையால் இலக்கண விளக்கம் செய்யவேண்டும் என்பதை முனிவர் தமது பெருநோக்காகக் கொண்டார் என்பது நன்கு தெளியலாம்.

சில நன்னூல் சூத்திரங்களைத் தொன்னூலார் ஒரே சூத்திரமாகத் தொகுப்பார். உதாரணமாக நன்னூல் 63, 64, 65-ம் சூத்திரங்கள் தொன்னூலில் நாற்பத்து மூன்றும் சூத்திரத்தில் அடங்கும்.

> செந்தமிழ் ஆகித் திரியா தியார்க்கும்
> தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்

என்ற நன்னூல் இயற்சொல் இலக்கணத்தைத் தெளிவுறக் கூறும் முயற்சியி லீடுபட்டு,

இயற்சொல் என்பது இயல்பில் திரிபிலா
தானெளி தெவர்க்கும் தன்பொருள் விளக்கலே
(43-ம் சூத்திரம்.)

என்றார். பிற இலக்கண நூல்களில் இல்லாத நுட்பங்களையும், புதிய பாகுபாட்டு முறைகளையும் இதில் காணலாம். ஐரோப்பிய மொழிகளில் வழங்கும் வாக்கலங்கார சாஸ்திரத்தின் (Rhetoric) பிழிவைத் தொன்னூல் பொருள் அதிகாரத்தில் அடிகள் அமைத்துக் கொடுக்குந் திறன் பாராட்டுதற்குரியது. நன்னூலும் அதன் முதனூல் பலவும் தேர்ந்த நயத்தையெல்லாம் திரட்டி அவர் நமக்குத் தந்த தொன்னூலை விளக்கமொடு படிப்பார் வேறு துறைபுகுந்து விதி யுணரத் துணிவார்கொல்லோ?

முழுமையும் இலத்தீனில் அமைந்த கிளாவிஸ் என்ற இலக்கண நூல் மேனாட்டுத் தமிழன்பர்க்குத் தமிழ்ப் பொருளியலையும் செய்யுளியலையும் அறிமுகப்படுத்தும் கருத்தோடு இயற்றப் பெற்றதாதல் வேண்டும். இந்த நூலைக்கொண்டு வீரமாமுனிவர் ஆய்ந்த பல இலக்கண இலக்கிய நூல்கள் இவையிவையெனத் தெரிந்துகொள்ளலாம். நன்னூல், அகப்பொருள், புறப்பொருள், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் முதலியவற்றை அடிகளார் துருவிக் கற்றிருக்கின்றார். மேலும் சிந்தாமணி, சிலப்பதிகாரம், இராமாயணம், பாரதம். நைடதம், புகழேந்தி வெண்பா, நாலடியார், குறள், இனியவை நாற்பது இன்னாநாற்பது ஆகியவற்றைத் தமிழ்ப்புலமை நாடுவோர் கற்கவேண்டுமென்கின்றார். இந்த நூல்களில் முனிவர்க்கு நல்ல ஈடுபாடு இருந்ததென்பது நன்கு புலப்படுகின்றது.

முன்னாளில் எகர ஒகரக் குற்றெழுத்துக்களும், நெட்டெழுத்துக்களும் ஒரேமாதிரி எழுதப்பெற்றன. வேறுபாடு அறிவதற்காக எகர ஒகரக் குற்றெழுத்துக்களின்மேல் புள்ளிவைத்து எ் என்றும் ஒ் என்றும் எழுதினர். நெட்டெழுத்துக்களைப் புள்ளிவையாது எ என்றும் ஒ என்றும் எழுதினர். வீரமாமுனிவர் இதற்குமேலும் ஒரு மாறுதல்செய்து எகர ஒகரக் குற்றெழுத்துக்களின் மேல் கோடு இடுதல் வேண்டுமென்றும், மெய் எழுத்துக்களின்மேல் சுழித்த புள்ளிவைக்க வேண்டுமென்றும் சூத்திரம் செய்தார். இவ் விதியைப் பின்பற்றியே பதினெட்டாம் நூற்றாண்டு அச்சுப்புத்தகங்கள் சிலவற்றில் கோடும் சுழித்த புள்ளியுங் காண்கின்றோம். ஆனால் இக் காலத்தில் இம் முறையும் மாறி ஏகார ஓகாரங்கள் முறையே கோடும் புள்ளியும் கீழே அமைக்கப்பட்டு வழங்கப்பெறுகின்றன. உயிர்மெய் ஏகார ஓகாரங்களிலும் வீரமாமுனிவர் திருத்தஞ்செய்தார். அக்காலத்தில் கெ, பெ என்ற உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் கெ், பெ் என்று புள்ளி கொடுத்து எழுதப்பெற்றன. கே பே உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் கெ, பெ எனப் புள்ளி பெறாது எழுதப்பெற்றன. படிப்பதற்கும் எழுதுவதற்கும் தெளிவாக இருக்கும் பொருட்டு வீரமாமுனிவர் நெட்டெழுத்துக்களுக்கு மேலே, சுழித்தெழுதும் வழக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இதைப்பற்றிக் கொடுந்தமிழ் இலக்கணம்" முதல் அத்தியாயத்தில் முனிவர் எழுதுவதாவது:—

"எகரக் குற்றெழுத்தும் ஏகார நெட்டெழுத்தும், ஒகரக் குற்றெழுத்தும் ஓகார நெட்டெழுத்தும் (குறில் நெடில் வேறுபாடுகளைக் காட்டும் அடையாளம் இல்லா

மல்) ஒரேவிதமாக எழுதப்படுவதால், அவர்கள் (தமிழர்) குற்றெழுத்து, நெட்டெழுத்து என்னும் வேறுபாட்டினைப் பிரித்தறியும் பொருட்டு நெட்டெழுத்துக்களின் மேல் புள்ளியில்லாமலும், குற்றெழுத்துக்களின்மேல் புள்ளிவைத்தும் எழுதும்படி (பிள்ளைகளுக்குக்) கற்பிக்கின்றார்கள். ஆகவே **மெய்** எனும் சொல்லிலுள்ள (ெ) கொம்பின்மேல் புள்ளி வைக்காதபடியால் **மேய்** என்று படிக்கப்படுகின்றது. ஆனால் மெய் என்கிற சொல்லில் கொம்பின்மேல் புள்ளி வைத்திருக்கிறபடியால் அது மெய் என்று படிக்கப்படுகின்றது. அப்படியே **பொய்** எனும் சொல்லில் கொம்பு புள்ளி பெறாதபடியால் **போய்** என்றும், பொய் என்பதில் கொம்பு புள்ளி பெற்றிருக்கிறபடியால் பொய் என்றும் படிக்கப்படும். ஆனால் (சில வாக்கியங்களில் தவிர) இந்த அடையாளம் வைத்து எழுதுவதை நான் பார்த்ததில்லை; இது எழுதுவோரின் அசட்டைத்தனமாக இருக்கலாம். இந்த எகர, ஒகரக் குற்றெழுத்து, நெட்டெழுத்துக்களின் வேறுபாட்டை எளிதாகத் தெரிந்துகொள்வதற்கு வேறொரு வகையை நான் கண்டறிந்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். குறிலுக்கும் நெடிலுக்கும் ஒரே மாதிரியாக எழுதப்பட்டு வருகிற கொம்பு என்று சொல்லப்படுகிற (ெ) இந்த எழுத்தைக் குற்றெழுத்தைக் குறிப்பிடவும், இக் கொம்பையே மேலே சுழித்து (ே) இவ்வித மாக எழுதினால் நெட்டெழுத்தைக் குறிப்பிடவும் மாற்றி அமைத்தேன். உதாரணமாக மெய், மேய், பொய் போய் (இச் சொற்களில், கொம்பு மேலே சுழிக்கப்படாதவை குற்றெழுத்து ; மேலே சுழிக்கப்பெற்றவை நெட்டெழுத்து) இந்த முறை ஒப்புக்கொள்ளப்பட்டு அநேகரால் வழங்கப்பட்டு வருகிறது.”

பிங்கலமும் திவாகரமும் நிகண்டு தேடிப்
பேரலுப்புக் கொள்ளாத பெற்றி காண
இங்கெவரும் நினையாத பொழுதே பெஸ்கி
எழிலியதோர் அகராதி இயற்றித் தந்தான்.

அந்த அகராதிதான் சதுரகராதி. நமது முன்னோர்கள் சொற்களுக்குப் பொருள்காணப் பயன்படுத்திய கருவி நூல்கள் நிகண்டுகளே. அவை தெய்வப் பெயர்த் தொகுதி மக்கட் பெயர்த்தொகுதி என்றிவ்வாறு பல தொகுதிகளில் செய்யுள் வடிவில் அமைந்திருக்கும். இவற்றை நெட்டுருப்பண்ணி மனதில் அமைத்துக்கொள்வர். மேனாட்டு மொழிகளில் உள்ளது போன்று அகர வரிசையில் அமைந்த அகராதியைத் தமிழுக்கீந்த வள்ளல் வீரமாமுனிவர். இவர் தொகுத்த சதுரகராதி பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கு பகுப்புக்களை உடையது. ஒரு பெயருக்குப் பல பொருள் உண்டென்றால் அப்பெயரும் பொருள்களும் தொகுக்கப் பெற்ற பகுதி பெயரகராதி. ஒரு பொருளுக்குப் பல பெயர் உண்டென்றால் அப்பொருளும் பெயர்களும் தொகுக்கப்பெற்ற பகுதி பொருளகராதி. இரண்டு முதல் பல சேர்த்து ஒரு சொல்லாக வழங்குவது தொகையகராதி. ககர முதல் னகர வீறாக உள்ள பதினெட்டெழுத்தும், குறிலும், நெடிலுமாய் எதுகை பற்றி வருந் தமிழ்ச் சொல் அடங்கியது தொடையகராதி. "செறிந்த் காட்டுக்குச் சமமாயிருந்த திவாகர நிகண்டு முதலியவற்றை இச் சதுரகராதியால் சிறந்த சிங்காரத் தோட்டமாக்கிய பெருமை வீரமாமுனிவருக்குரியது" என்பர் அறிஞர் முத்துசாமிப்பிள்ளை. பின்னெழுந்த உவின்ஸ்லோ, பபிரிசியஸ், பவானந்தம் பிள்ளை, கதிர்வேற்பிள்ளை, கந்தையா

**பிள்ளை லெக்சிக்கன்** அகராதிகளுக்கு இது வழிகாட்டியாக அமைந்தது.

இச்சதுரகராதி நீங்கலாக **தமிழ்-இலத்தீன்** அகராதி ஒன்றும் **தமிழ்-போர்த்துகீசிய** அகராதி ஒன்றும் முனிவர் தொகுத்துள்ளார். முந்திய அகராதியில் ஒன்பதாயிரம் தமிழ்ச்சொற்களுக்கு இலத்தீன் மொழியாக்கம் தரப் பெற்றுள்ளது. பிந்திய அகராதியில் நாலாயிரத்து நானூறு போர்த்துக்கீசியச் சொற்களுக்குத் தமிழிலும், இலத்தீனிலும் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இக் கருவி நூல்கள் யாவும் மொழித் திறத்தை முட்டறுத் துணரவும் பெருந்துணை புரிவன. இலக்கண நுட்பங்களைச் செவ்வையாய்த் தேரவும் இலக்கியத் திறன் ஆய்ந்து தெளியவும் பெருந்துணை புரிவன.

---

## புது வசன எழுத்தாளர்

**வேத விளக்கமொடு வேதியரின் நல்லொழுக்கம்**
**போத அவிவேக பூர்ணகுரு—காதை**
**வசனநூல் முந்தமுந்த வண்டமிழில் செய்தான்**
**திசைதொறும் போற்றத் தெளிந்து.**

**நம்** இலக்கிய வரலாற்றில் உரைநடை பாட்டைப் போன்ற பழமை உடையது. உரைக்கப்பட்டு இயலுதலின் உரை நடை எனப் பெயராயிற்று. வசனம் என்பது 'வச்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. 'வச்' பேசுவது உரைப்பது சொல்வது என்ற பொருள் தருவது. வாக்கு வாக்கியம் வாச்சியம் என்பனவெல்லாம் 'வச்' என்ற வேர்ச் சொல்லின் விரிவுகளே என்பர்.

தொல்காப்பியங் கூறுகின்ற எழுவகை யாப்பில் உரை வகையும் ஒன்று. அக்காலத்தில் யாப்பும் செய்யு

னும் பாட்டையும் உரையையும் ஒருசேர உணர்த்திய பொதுச்சொற்கள். வசனத்திலாகட்டும் அன்றிக் கவிதையிலாகட்டும் யாக்கப்படுகின்ற எதுவும் யாப்பு; செய்யப்படுகின்ற எதுவும் செய்யுள். சிலப்பதிகாரம் உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள் என்று குறிக்கப்படுதல் நாம் அறிந்ததே. இங்கே செய்யுள் என்பது பாட்டையும் உரையையும் சேர உணர்த்தும் பொதுச் சொல்லாகவும் உரையும் பாட்டும் சிறப்பினம் உணர்த்தும் தனிச்சொற்களாகவும் அமைந்து பொருள் பயத்தல் கண்கூடு.

வீரமாமுனிவர் காலத்தில் செய்யுள் என்பது கவிதையை மட்டும் பாட்டை மட்டும் குறிக்கும் சொல்லாயிற்று. அவர் செய்யுளை இசைத் தமிழ் என்றும் வசனத்தை இயற்றமிழ் என்றும் குறியீடு செய்துள்ளார். பழமையான செய்யுள் இலக்கியப் பேரளவிற்கொத்தவண்ணம் வசன நூல்கள் இல்லை. தண்டமிழ்த் தொல்லாணை நல்லாசிரியர் தனியாகத் தமிழ் வசனம் எழுதத் தெரியாதவர் என்பதல்ல. கிடைக்கின்ற வசனக் கூறுகள் அன்னார் எழிலும் இனிமையுஞ் செறிந்த உரை நடைநூல் இயற்றும் ஆற்றலினர் என்பதைத் தெளிவுறுத்தும். யாப்பைப் போலவே உரை நடையையும் நம்முன்னோர் வகைப்படுத்தி வளர்த்தனர் என்பதும் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரத்தால் தெரியவருகின்றது

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
உரைவகை நடையே நான்கென மொழிப.

முந்தையோர் ஆட்சியில் இப்படி வகைவகையாக இருந்திருப்பினும் பாவகைப் பெருக்கத்திற் கேற்றபடி உரை வகை வளம்பெறவில்லை என்றால் வசனநூலுக்கேற்றபடி, விரிவாக எழுதுதற்கேற்றபடி, வசதிகளும் கருவிகளும் அக்காலத்தில் ஏற்படாமையே அதன் காரணம் ஆகும். மனனஞ் செய்துகொள்ளும் வாய்ப்பை எண்ணி இலக்கணம் இலக்கியம் மருத்துவம் சோதிடம் அனைத்தும் செய்யுளில் இயற்றப்பெற்றன. இலக்கண இலக்கியங்களுக்கு உரை எழுதப் போந்தாரும் விரிவஞ்சி நெடு உரை எழுதாது விடுத்தனர். குறிப்புரையாகவும் அரும் பதவுரையும் எழுதி அமைந்தனர்.

ஐரோப்பியர் இந்நாட்டிற்கு வந்தபோது செய்யுள் இலக்கியம் பெருகி இருப்பதையும் வசன இலக்கியம் அருகி இருப்பதையும் ஊன்றிக் கண்டனர். மேலை நாட்டுத் தமிழ் அறிஞர்கள் தனித்த உரை நடைநூல்கள் இல்லாக் குறையைப்பற்றி மிக வருந்தி எழுதியிருக்கிறார்கள். நம் நாட்டு அறிஞர்களும் அதன் தேவையை உணர்ந்து ஆவன செய்ய முற்பட்டனர்.

திறமான உரைநடை நூல்களைச் சமைத்துத்தரும் பணியில் முன்னின்று உழைத்த பிறநாட்டவருள் முதல் அணியினர் வீரமாமுனிவர். இவருக்கு முன்னால் தமிழ் நாட்டில் திருத்தொண்டாற்றிய தத்துவபோதகர் (ராபர்ட் தெ நொபிலி) **ஆத்தும நிருணயம் ஞானோபதேச காண்டம் தூஷண திக்காரம்** என்ற பல உரைநடை நூல்களை எழுதினார். ஆனால் அவை சமண உரைநடை நூல்களைப்போலவும் வைஷ்ணவ பாஷ்யங்களைப்போலவும் மணிப்பிரவாள நடையில் அமைந்தவை. திட்டமான தமிழ் நடை பயின்ற உரைநடை நூல் என்று உரைக்கத் தகுந்தவை அல்ல.

வீரமாமுனிவர் ஐரோப்பிய உரைநடை வளத்தைத் தமிழில் வடித்துதவினார். தமிழின் புதிய உரைக்குப் பாதை வகுத்தவர்களில் இவரும் ஒருவர். தமிழ் நூல்கள் பெரும்பாலும் செய்யுட்களாக இலங்கிய காலத்தில் இத்தகைய செய்யுள் நூல்கள் சாதாரண தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன்படாதெனக் கருதினர் நம் முனிவர். அறிவு விளக்கத்திற்கு அடுக்கத் துணையாவது உரையே என்பதைத் தெளிந்த முனிவர் இது காறும் நிலவுதற்கில்லாத தனிவசன நூல்கள் எழுதினார். கதைப் போக்கில் கருத்து விளக்கம் செய்தார்.

முனிவர் இயற்றியருளிய உரைநடை நூல்களைப் பற்றிய சிறு குறிப்புக்கள் பின் வருவன. இவற்றைத் தொடர்ந்து தொன்னூல் விளக்கத்திலுள்ள ஒரு உரைப் பகுதியும் பரமார்த்த குரு கதையில் ஒரு பகுதியும் உதாரணத்திற்காகக் காட்டப்பெறும். இவை நம் முனிவர் உரைநடை புதுக்கிய உயர்தர எழுத்தாளர் என்பதை நிறுவும்.

**வேதவிளக்கம்.** இது பொதுமறையின் கொள்கை கோட்பாடுகளை விளக்கி உரைப்பது. 1728ல் இயற்றப் பெற்றது. தரங்கம்பாடியிலிருந்த லுத்தரன் சபையினரை நோக்கி இயற்றப்பெற்ற இந்நூல் அவருடைய ஐயங்களுக்கு விடைதரும் பான்மையில் உள்ளது.

**பேதக மறுத்தல்.** லுத்தரன் சபையினர் திருச்சபைப் பேதகம் என்ற நூலை வெளியிட்டனர். அதற்கு விடை இறுக்குமுகமாக இம் மறுப்பு நூல் இயற்றப்பெற்றது. இது 1858-ல் வேத விளக்கத்தோடு பதிப்பிக்கப் பெற்றது

லூத்தேர் இனத்தியல்பு. இது அங்கதப் போக்கில் எழுதப்பெற்றது. 23 அதிகாரப் பகுப்புக்களைக் கொண்டது.

**வேதியர் ஒழுக்கம்.** திருமறைத் தொண்டரான உபதேசிகர் இன்னின்ன அறிந்திருக்க வேண்டும்; இன்னின்னவாறு ஒழுகுதல் வேண்டும் என்பதை எடுத்துரைப்பது. 20 அதிகாரப் பகுப்புக்களை யுடையது. வெஸ்லிய சபை **ரேவரண்ட் எலிஜா கூல்** என்பார் "இலக்கணம் அகராதி இவற்றிற் கடுத்தபடியாக பெஸ்கியர் எழுதியவற்றுள் மிக அருமையான நூல் வேதியர் ஒழுக்கமே. உபதேசிகரான ஞானாசிரியன்மார் இத்தகையார் என்று இலக்கணம் கூறும் முறையிலும் அவர் கொள்ளத்தகும் இலட்சியங்களைக் குறித்துக்காட்டும் வகையிலும் அவர்களைத் தேவ ஊழியத்திற்கு ஏவித் தூண்டுகின்ற தன்மையிலும் இந்நூல் திறம்படச் செய்யப்பெற்றது" என்றனர். போப்பையர் இந்நூலைப் பற்றிச் சொன்னதாவது: "பெஸ்கியரது உரைநடை நூல்களில் வியத்தகு நூல் வேதியர் ஒழுக்கமே. **புனித கிரகோரியார்** எழுதிய **கியூரா பாஸ்தொராலிஸ்** என்ற நூலை ஒருசார் தழுவி எழுதப்பெற்ற இந்நூல் தமிழ் வசன மாணவருக்கு வழிகாட்டியாம் நூல்"

இந்நூல் **அத்யாபக சீலமு** என்ற பெயரில் தெலுங்கிலும் **வேதபோதகார கிரமா** என்ற பெயரில் கன்னடத்திலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.

**பரமார்த்த குரு கதை.** இத்தாலி நாடு நாவலின் பிறப்பிடம். 13-ம் நூற்றாண்டில் இத்தாலியக் கலைஞர்கள் 'நூவேல்' எனும் பெயர் கொண்ட பலகதைக் கொத்துக்களை வெளியிட்டனர். தற்காலம் வழங்கும் நாவல்

நூவல்' என்பதிலிருந்து வந்ததாக நவில்வர். ஐரோப்பிய நாவல் முறையை நன்கு அறிந்த முனிவர் தமிழ்ப் பரமார்த்தகுரு எழுதினர். இது பரமார்த்தன் என்னும் குரு கதை எனவும் பரமார்த்தன் என்னும் அவிவேக பூரண குரு கதை எனவும் வழங்குகின்றது.

இளந்தமிழ் நடையால் இயன்ற இந்த நகைச் சுவைக் கதை தமிழ் கற்கப் புகுவார்க்கென எழுதப் பெற்றது. இது ஐரோப்பிய மொழிகளிலும் தென்னாட்டுக் கிளை மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பெற்றுள்ளது. இதில் வரும் தொடர்களும் குறிக்கப்படும் சம்பவங்களும் தமிழ் நாட்டில் பழமொழிகளின் சீர்த்தியோடு வழங்கப்படுகின்றன.

## தொன்னூல் விளக்கத்தில் ஒரு உரைப்பகுதி.

வள்ளுவர் உரைத்த பலவற்றுள் ஒன்றை நான் தெரிந்துரைப்பத் துணிந்தேன். அன்னார் தந்த பயன் என்னும் பெருங்கடல் ஆழத்தில் மூழ்கி ஆங்குஉடை அரு மணி ஒருங்கு எடுத்து ஒரு சிறு செப்பினுள் அடைத்தாற் போலத் திருவள்ளுவரது பயன் எல்லாம் விரித்துப் பகரும்படி நான் வல்லன் அல்லேன். ஆகையில் அக்கடற் றுறை சேர்ந்து ஒரு மணி எடுத்துக் காட்டல் உணர்ந் தேன். அவர் சொன்ன குறளில் ஒன்றே இங்ஙனம் நான் விவரித்துரைப்பத் துணிந்தேன். அஃதாவது

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற"

என்பது. இல்லறந் துறவறம் என்ற இவ்விரண்டினுள்ளும் அடங்கி நிற்கும் எல்லா அறங்களும் அறத்தின் தூய்மையாற் பெறும் பெருமை அடையும் எனவும் மனத்தினுள் மாசுகொண்டவன் செய்யும் தவமும் தான

முழுவதும் யாவையும் அறத்தின் அரவமாவதன்றி அறத்தின் பயனுள அல்ல எனவும் அக்குறளின் பயன் இவை எனவும் விரித்துக் காட்டுதும். விரிப்பவே மெய்யும் பொய்யும் விளக்கி உட்பயன் தரும் மெய்யறத்தின் நன்மையே வெளியாய் இஃது ஒன்று உணர்ந்து நாம் அதற்கு ஒப்ப நடந்தால் இது வீடு எய்தும் வழி எனக் காணப்படுமே. பெரும் பொருள் நேர்ந்து பொய்ம்மணி கொள்வது கேடு என்றாயினும் பொருளைநேர்ந்தும் உடலை வாட்டியும் உயிரை வருத்தியும் மேற்கதி வீட்டிற் செல்லாச் சில பொய் அறங்களில் ஊடாடுவது அதிலும் கேடாம் அன்றோ? இதனை விலக்கித் தனது உயிர் ஆக்கம் காப்பது வேண்டி இக்குறட் பயன் ஆராய்வது நன்றே.

*　　*　　*　　*

அறம் எனப்பட்ட யாவும் மன்னுயிர்க்கு ஒருயிராகவும் மனத்திற்கு ஓர் அணியாகவும் நெஞ்சத்திற்கு ஒரு செல்வமாகவும் வழங்கும் இயல்பினை உடையன. ஆகையில் புறத்துத் தோன்றும் வேற்றுருக் கோலங்காட்டி அகத்துள் நுழையா அறமோ அறத்தின் பேறும் பெருமையும் உடையன என்பர். எப்பொருளினும் அதன் உண்மை உணர்தலே ஞானம். உணர்ந்த பொருளின் இவையே நல்லவை எனவும் இவையே அல்லவை எனவும் தெளிதலே காட்சி. தெளிந்த வழியே அல்லவை ஒருவி நல்லவை மருவி ஒழுகலே ஒழுக்கம். இந்நல்லொழுக்கமே அனைத்தறன். ஆகையில் இவை எல்லாம் மனமுயற்சியால் ஆக வேண்டுழி மனம் ஒவ்வா அறன் எல்லாம் பொய் என இகழ்ப்படுவது முறையே என்பது.

*　　*　　*　　*

அன்றியும் பிறர் நோய் கண்டு அகத்து இரங்கான் ஐயோ!என வாய்பொய்த்த இரக்கம்காட்டல் தயையோ? நெஞ்சங் கடுத்த சுடு பகை கொண்டான் முக நக நட்பது நட்போ? ஒன்று ஈந்து ஒரு பத்து அடித்துக் கொள்ளத் துணிந்தான் பிறர்க்கீந்து உதவுதல் கொடையோ? மனை நகர் நாடும் அகல நீக்கி உட்பொருள் இன்பம் அணுகும் ஆசை நீங்கான் மறு துணை இல்லா வனம் புக்குறைதல் துறவோ? பிணியுறப் பசிமிக பகைபட மொய்த்த துன்பம் இன்பம் என உணர்ந்து அகங்கலங்காதான் புறத்தும் புலம்பாதிருப்பது பொறையே; பிறர் அழகு ஆசை மனம்புகாத் தன்னிறை காத்த மகளிர் புறத்துக்காட்டும் ஒடுக்கமுங் கற்பே; தன் மனக்கோட்டம் கண்டு நாணுதல் நாணமே; மனத்தில் இறைஞ்சிப் பிறரைப் பணிவான் புறத்துப் பொய்யாச் சொல்லின் வணக்கமும் பணிவே; உளத்தில் கல்ங்காது எதிர் வெம்போர் முகத்து அஞ்சான் துணிவாய சேவகந்தானும் வீரமே.

அன்றியும் உள் ஒவ்வாமல் புறத்துத் தோன்றும் சித்திர அறத்தின் சாயலும் பயன் தரு நல்லறம் எனப் படுமாயினும் நாண் கொண்டு ஆட்டிய புன்மரப்பாவையும் களிகொண்டாட்டிய கருங்கட்பாவையும் வேறுபாடின்றி ஒக்குமெனவும் கண்ணே களிய அழகு காட்டி உள்ளுயிர் கொல்லும் நஞ்சுடைக் காஞ்சிரப் பழனும் புறத்து வீசும் மணமே ஒப்ப அகத்தும் இனிய தேறல் கொண்ட மாங்கனி தானும் ஒன்றெனவும் ஒளிபெற எழுதிய ஓவியப் படமும் உயிர் பெற்றெழில் வாழுடலும் ஒன்றெனவும் இவை வேறல்ல என்புழி அன்றே மனமுள் ஒவ்வா வரைந்தோன் முகத்தெழும் பொய்யறச் சாயலும் நெஞ்சில் வீற்றிருந்து இனிதிற்புறத்துத் தோன்றும் மெய்யற மாட்சியும் ஒன்றெனச் சொல்லவும்

படுமே. பசிய பொற்றூண் நிரைத்து நாட்டி நெற்றியில் பவளப் போதிகை ஏற்றுபு வயிர நன்மணி உத்திரம் பாய்த்திப் பளிக்குச் சுவர் மேன்முகில் அகடு உரிஞ்சுயர் சிகரம் ஒளியின் மணியாற் கூட்டி வாணிகர் மாளிகை அருந்தொழில் தச்சர் வழுவற முடிப்பினும் உள்ளாளரசன் கொடுங்கோல் ஓச்சும் குரூரனுயில் உலகில் ஆய ஒரு பயன் உண்டோ? அவ்வாறு ஒருவன் அருமறை ஓதினும் அரும்பொருட்கலைநூல் அளவறக் கற்கினும் பல நதி ஆடினும் பலதலம் சேரினும் வரைவில கொடுப்பினும் வழுவில நடப்பினும் கோயில் மண்டபம் குளம் முதல் பற்பல வாயிற்றருமம் என உவந்து இயற்றினும் திரள் பொருள் ஈட்டிய செல்வம் துறப்பினும் மனைநகர் நாடு மகார் சுற்றமும் துறந்து அருவனத்திடை துணையற உறையினும் இன்புறு சுவை சுகம் எல்லாம் மறுத்தே ஐம்பொறி கொன்று உடல் அழிய நோற்பினும் ஈரற வழியெலாம் நேரச் செல்லினும் மனத்தூடிய வினை மாசுளனுயின் தனக்கொரு பயனும் தராதென உணர்க.

## பரமார்த்த குரு கதையில் ஒரு பகுதி

பலநாள் சென்றபின்பு தூரப்பயணம் போகும்படி அவசரமுண்டாயிற்று. சீஷர்கள் அவ்வளவு தூரம் நம்முடைய குருவானவர் கால்நடையாகப் போகமுடியாது. அதிக பிரயாசமாம் என்று ஒரு மோழைமாடு வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வந்தார்கள். அதற்கு வாடகை நாளொன்றுக்கு மூன்று பணம் கொடுக்கத் தீர்த்துப் பல அலுவலினுலே விடிந்ததன்மேல் ஒரு சாமங் கடந்தபின் குருவும் சீஷர்களும் பயணம் புறப்பட்டுப் போனூர்கள். கடுவேனில் என்னுங் கோடைகால மாகையால் அவர்கள் நடக்க நடக்கக் கொள்ளி

கொண்டு சுடுகிறதுபோலச் சுள்ளு சுள்ளென வெயி லெரிக்க, மரம் மட்டை, குளம் குட்டை இல்லாமையால், உண்ண நீரும் ஒதுங்க நிழலும் கிடையாத வெட்டவெளி யாகிய பாலைநிலத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள். அப்படியே போகப் போக அகோரமும் கடூரமுமான வெயிலின் வெப்பம் பொறுமல், பசிய இளங்கீரைத் தண்டுபோலக் கிழக்குருக்கள் துவண்டு கீழேவிழத் தலைப் பட்டார். அதைக்கண்டு சீஷர்கள், மாட்டை நிறுத்தி, அவரை இறக்கி, அவர் வெப்பத்தை ஆற்றுவதற்கு நிழல் எங்கு மில்லாமையால் நிறுத்தப்பட்ட மாட்டின் நிழலிலே தரையில் துணியை விரித்துப் போட்டுக் கிடத்தி விசிறியில்லாததினுல் வஸ்திரத்தினுலே விசிறிக் கொண்டிருந்தார்கள். அவருக்கு அதிலே கொஞ்சம் ஆறுதலான பிறகு, குளிர்ந்த காற்றுவீச, மறுபடியும் மாட்டின்மேலேற்றி மெள்ள மெள்ள நடத்திக்கொண்டு போய்ப் பொழுது போகுமுன்னே ஒரு சிற்றூரிற்சென்று இறங்கினுர்கள். அங்கே ஒரு சிறிய வீட்டின் நடையில் போயிருக்கும்படி வாசலுக்குள் நுழைந்தவுடனே மாட் டுக்காரனுக்கு மூன்று பணத்தை எடுத்துக் கொடுத்தார் கள். அது அவன், 'போதாது' என்முன். இதென்ன, முன் உன்னோடே பேசிச் சம்மதித்த நாட்கூலி மூன்று பணந்தானல்லவோ?' என்று அவர்கள் சொல்ல, அவன் மறுத்து, 'மாடு வாகனமாயேறிப் போவதற்காக உதவின தற்கு இந்தக்கூலி பொருந்தினது சரிதான்; பிறகு நடு வழியில் வெயிலுக்குக் குடையாக உதவினதற்குக் கூலி கொடுக்கவேண்டாமா?' என்று கூச்சல் போட, 'இது அநியாயம், அநியாயம்' என்று அவர்கள் கோபித்துக் கடூரமாய்ப் பேச, அப்புறம் மாட்டுக்காரனுக்கும் அவர் களுக்கும் சண்டையாய்ப் பெரிய ஆரவாரமுண்டானதி

ஞல், ஊரார் அறிந்து, ஆண் பெண் பெரியோர் சிறியோ ரெல்லாரும் ஒரு கூட்டமாகக் கூடி மொய்த்து வந்தார்கள். அவர்களில் நியாயக்காரனொருவன் சந்தடியை விலக்கி வந்து கூச்சலையடக்கி, இருதிறத்தார் வழக்கையும் விசாரித்து, 'நல்லது, நான் சொல்லுகிற தீர்ப்புக் குள்ளாவீர்களோ, உங்கள் சம்மதி யென்ன? சொல்லுங்கள்' என்று கேட்டுப் பின்பு சொல்லத் தொடங்கினுன்.

'நான்தான் சில நாளைக்குமுன் தூரதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகையில் நடுவழியிலே ஒரு இராத்திரி ஓர் ஊரில் ஒரு பெரிய விடுதியில் தங்கினேன்; அங்கே வந்தவர்களுக்கெல்லாம் வசிக்கும் இடம் குடிக்கூலிக்கு விடுவதன்றிச் சாப்பிடுகிறதற்கு வேண்டிய சோறு கறி முதலானவைகளுங் கிரயத்துக்குக் கொடுப்பார்கள்; ஆகையால், 'உனக்கு ஏதாவது வேண்டுமா?' என்று அவர்கள் என்னைக் கேட்டபொழுது, எனக்குச் செலவுக்குப் பணமில்லாமையால் 'நான் கட்டுச்சோறு கட்டிக் கொண்டு வந்திருக்கிறேன், வேறொன்றும் தேவையில்லை' என்றேன்; அத்தருணத்தில் அங்குவந்த மற்றவர்களுக்கு ஒரு பெரிய ஆட்டுத் தொடையை இருப்புச் சலாகையிற் கோத்து நெய்தடவித் தணலின்மேல் காட்டிப் பக்குவமாய்ச் சுழற்றிச் சுட்டார்கள்; அது சிவக்க வேகவேக அதிற் பூசிய நெய் உருகி நெருப்பில் துளித்துப் புகையத் தலைப்பட்டது; அப்பொழுது அதின் வாசனை அதிக இரம்மியமான பரிமளமா யிருந்தது; நான் கொண்டு வந்த கட்டுச்சாதத்தை அந்த மணத்தோடே சாப்பிடுகிறது நல்லதென்று நினைத்து அதை அப்படியே சற்று நேரஞ் சுழற்றிக்கொண்டிருக்கும்படி உத்தரவு கேட்டேன்; அவ்வாறே சுழற்றிக் கொண்டிருக்க, நான் சாதத்தை அவிழ்த்தெடுத்துச் சீலையோடே ஒருகையால்

அந்தப் புகையின்மேற் பிடித்து, மற்ெருரு கையால் சீக்கிரமாய் அள்ளியள்ளி அவ்வாசனையிலேயே இன்பமாய்ச் சாப்பிட்டேன்; பிறகு போகவேணுமென்றிருக்கையில் விடுதிக்காரன் வாசனை முகந்ததற்காகக் கூலி கேட்டான். நான், 'அதற்கேது கூலி?' என்றேன்; அவன் 'கொடுக்கவேணும்' என்றான்; நான் 'கொடுக்கிறதில்லை' என்று எழுந்து நடந்தேன்; அவன், 'நீ கொடாமற்போகக் கூடாது' என்று ஆணையிட்டுத் தடுத்தான்; இந்தப்படி இருவரும் வழக்கிட்டு அந்த ஊர் அதிகாரியண்டைக்குப் பிராதுக்குப் போனோம்; அவனோ பூரண பண்டிதன்; சகலசாஸ்திர நிபுணன்; அதிக புத்திமான்; மகா சமர்த்தன்; மிகவும் நியாய சூட்சுமந் தெரிந்தவன்; அந்த மகானுபாவன் பண்ணின நியாயத்தீர்ப்புக் கேளுங்கள்; 'கறி தின்றதற்கு விலை பணமும், கறிமணம் முகந்ததற்கு விலை பணத்தின் பணமுமாகும், இதுதான் தீர்ப்பு' என்று விடுதிக்காரனை அருகே அழைத்துப் பணம் நிறைந்த பையை எடுத்து அவன் மூக்கிலே அழுந்த உரைத்துத் தேய்த்தான்; அவனும், 'மூக்குப் போச்சுது! ஐயோ, மூக்குப் போச்சுது! இந்த மட்டில் வந்த கூலி போதும் போதும்!' என்றான். பார்த்தீர்களோ! இதுவே நல்ல நியாயமும் உத்தம நீதியுமாம் அல்லவா? இந்தத் தீர்ப்புத்தான் உங்களுக்கும்; எப்படியென்றால், 'மாடேறி வந்ததற்குக் கூலி பணமும், மாட்டின் நிழலிலிருந்ததற்குக் கூலி பணத்தின் நிழலும் போதுமானவை; ஆகிலும் மாட்டுநிழற் கூலிக்கு இப்போது அஸ்தமித்ததினால் பணநிழல் அகப்படாது. அதற்குப் பதிலாகப் பணச்சத்தத்தை ஒத்துக்கொள்' என்று சொல்லி, அவனைச் சிக்கெனப் பிடித்துப் பணப்பையைத் தூக்கி அவன் காதிலே உரமாகத் தாக்கும்படி அதினால்

மோதியடித்து, 'பணச்சத்தங் கேட்டாயா?' என்றான்; அவனும், 'ஆமையா' கேட்டேன் கேட்டேன். காது நோகிறது, போதும் கூலி, போதும், அப்பா! உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது; என்னை விட்டு விடு' என்றான். அந்தச் சமயத்தில் அவனைப் பார்த்துக் குருவும், 'உன் மாடெனக்குப் போதும்; இந்தச் சஞ்சலம் இனி ஆகாது; நீ மாட்டை ஓட்டிக்கொண்டு போ, இன்னங் கொஞ்சந் தூரந்தான் பயணம் போகவேணும்; காலமே மெள்ள மெள்ள நடந்து போகிறேன்' என்று அவனைப் போகச்சொல்லிப் பின்பு நியாயக்காரனைப் பார்த்து, 'ஐயா, நீர் எங்கள் வழக்கைப் பாரபட்சமில்லாமல் எள்ளுக்காய் பிளந்தாற்போலச் சரியாய்த் தீர்த்தீர்' என்று அவனைப் புகழ்ந்து ஆசீர்வதித்தனுப்பினார்.

---

## மந்திரியான மாமுனிவர்

**சந்தாசாய் பென்பான் தமிழ்நாடாள் போதவனன்**
**மந்திரியாய் நின்ற மகிபணிவன்—நந்தா**
**விருதுபல பெற்றுவந்த வீரமுனி தன்னைக்**
**கருதுவதே உள்ளக் களிப்பு.**

1730-ம் ஆண்டையடுத்துத் தமிழகத்தில் ஆற்காட்டு நவாபு **தாஸ்ட் அலியின்** ஆதிக்கம் வலுத்து வந்தது. 1733-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் தாஸ்ட் அலியின் மருமகன் **சந்தா சாகிபு** படைத் தலைவராயிருந்து சிற்றரசு புரிந்துவந்தான். இவருடைய நட்பை நம் முனிவர் பெற்றதும் மாமுனிவர் மதி அமைச்சராய் சந்தா சாகிபிடம் அலுவல் ஏற்றதும் ஒரு விந்தைக் கதை.

மொகலாயரின் உறவு ஏற்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே அவர்தம் மொழி உறவு ஏற்பட்டு

விட்டது முனிவர்க்கு. மூன்றே மாதத்தில் **பாரசீகம்** உருது ஆகிய இரு மொழிகளையும் கற்றுக்கொண்டார். அவற்றில் உரையாடும் ஆற்றலும் பெற்றார்.

மொகலாயர் படை எடுப்பால் தஞ்சைக் கோட்டத்தில் அழிவுற்ற கோயில்கள் பல. இரண்டே கோயில்கள் தெய்வச் செயலால் அழியாமல் நின்றன. இவை திருச்சியை அடுத்த ஆவூரிலும் ஓரியூரிலும் இருந்தவை.

அநேக சமயங்களில் வீரமாமுனிவர் கிறிஸ்துவர்களுடைய உயிரையும் உரிமையையும் தீரமாய்க் காத்து வந்தார். மொகலாயர் முற்றுகையிட்ட கிறிஸ்துவத் தலங்களுள் துணிவுடன் நுழைந்தார். அவர் படைத் திறங் கண்டு பின்னிட்டாரில்லை. தம் உயிரைப் பொருட்படுத்தாமல் கொள்ளைக்காரர் கூட்டத்துள்ளே போய் அவரிடம் அஞ்சாது பேசினார். அறிவுரை புகன்றார். மொகலாயர் தம் கொள்ளை எண்ணம்விட்டு வந்த வழி மீள வகையும் செய்தார்.

முனிவர் ஆவூரில் அருட்பணி செய்துவந்த காலத்தில் அவ்வூர்க் கள்ளர் மரபினர் தம் மாடுகளைக் களவு செய்ததாக மொகலாயர் வீண் பழி சாற்றினர். அக் குற்றச்சாட்டை முதலாக வைத்து அவ்வூரை அழிக்க முற்பட்டு வந்தனர். வீரமாமுனிவர் வழக்கம்போல தெய்வ நம்பிக்கையோடும் அவர்களை அன்பால் ஆட்கொள்ளலாம் என்ற திடசித்தத்தோடும் அக்கூட்டத்தை நோக்கிச் சென்றார். அன்னார் ஏச்சையும் பேச்சையும் அவர் பொறுமையுடன் ஏற்றார். உருட்டலையும் மிரட்டலையுங் கண்டு ஒரு சிறிதும் தயங்கவில்லை. அவர்கள் அவரைத் தம் தலைவனிடம் அழைத்துச் சென்றார்கள்.

கொள்ளைக் கும்பலினர் எதிர்பார்த்ததற்கு நேர் மாருக அத்தலைவன் அவரை இன்முகத்தோடு வரவேற்று இருக்கை அளித்து மரியாதையாகப் பேசினுன். மாதவச்சீலரின் முக விலாசமும் மதி நலமும் மொழித் திறனும் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவன் அவரைச் சந்தா சாகிபிடம் அழைத்துச் சென்று அவர்தம் குணநலங்களைப் பாராட்டி அறிமுகஞ் செய்துவைத்தான். சந்தா சாகிபும் முனிவரின் அருங்குணங்களை அறிந்துகொண்டு அவரைத் தமக்கு அமைச்சராக அமையும்படி வேண்டினுன்.

இன்பம் பெருகும் திருத்தொண்டிற்கு இடையூருக இவ்வமைச்சுத்தொழில் இருத்தல் கூடாதே என்பதை முனிவர் எண்ணிப் பார்த்தார். சந்தா சாகிபிடம் அதனை எடுத்தும் மொழிந்தார். சாகிப் முனிவர்தம் சமயத் தொண்டிற்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாது என உறுதி சொல்லத் தம்மால் நாட்டிற்கும் தமது சகோதரர் திருத்தொண்டிற்கும் நலம் உண்டாக்கக் கூடுமாயின் அந்த அமைச்சு அலுவலை மேற்கொள்ளத் தடையில்லை என்று அதை அன்பர் பணிசெய்யும் அரிய வாய்ப்பாகக் கொண்டார்.

தம்முயிர்க் குறுதி எண்ணுர், தலைமகன் வெகுண்ட போதும் உண்மையே உரைக்கும் தீரர். இவர்தம் நல்லியல்புகளை நேரில் தெரிந்து மகிழ்ந்த சந்தா சாகிபு இவருக்கு **இஸ்மாத்தி சந்நியாசி** என்ற பட்டஞ் சூட்டினுன். இஸ்மஸ் என்ற அரபுச் சொல்லுக்குக் குற்றங்களைக் கடிந்திருக்கின்ற, பழுதற்ற என்பது பொருள், தீரத் துறந்த இத்தேசிகருக்குப் பழுதற்ற துறவி என்ற பட்டம் கிடைத்ததில் வியப்பில்லை.

தைரிய நாதருக்குக் கிடைத்த திவான் பதவியோடு நான்கு கிராமங்கள் சர்வ மான்யமாக வந்துற்றன என்பர். கொள்ளிடத்திற்கு வடக்கே திருச்சிப்பகுதியைச் சேர்ந்த **உக்கலூர், மால்வாய், அரசூர், நல்லூர்** என்ற நான்கு கிராமங்களின் வருவாய் திவான் பதவிக்குரிய பரிசாக வழங்கப்பெற்றது. சந்தா சாகிப் தன் பாட்டன் **சாத்துக்கான்** பயன்படுத்திய தந்தப் பல்லக்கைத் திவானுக்குக் கொடுத்து மரியாதை செய்தார்.

திவானன தைரியநாதர் பவனி செல்வதை திரு. அ. முத்துசாமி பிள்ளையவர்கள் வருணிப்பது வருமாறு: "இப்படி வீரமாமுனிவர் திவானாக இருக்கையில் வெளியே சாரி புறப்பட்டால் இத்தேசத்துப் பிரதான இந்துக் குருக்களுக்கு நடந்து வருகிற சிறப்பைப்போல இந்துக் கிறிஸ்தவர்களுடைய குருவாகிய வீரமாமுனிவர்க்கு இந்நாட்டு வழக்கம் பற்றி மேற்சொன்ன எப்போதுமுள்ள சிறப்புக்களோடுகூட, பீதாம்பரத்தால் செய்த பன்னிரண்டு குமர வானக்கொடியும் நாலு வெள்ளித் தடிக்காரரும், முப்பது குதிரைமேற் சேவகரும் குதிரைமேல் டங்காவும் நாகசுரமும் இவர் ஏறுகின்ற ஒரு வெள்ளைக் குதிரையும், ஒரு கருப்புக் குதிரையும் சேண முதலிய சிங்காரிப்போடு முன்னே நடக்க அர்க்கார்ட லாயித்துக்கள் முன்னோடே பின்னாலே ஓர் ஒட்டகத்தின்மேல் நகராவும், ஓர் ஒட்டகத்தின்மேல் கைத்தாளமும் முழங்கிக்கொண்டு மற்றோர் ஒட்டையின்மேல் பூசை பண்ணுகிறதற்கு வேண்டிய வஸ்திர பாத்திர முதலாகிய வஸ்துக்களும் மூன்று ஒட்டையின்மேல் கூடாரங்களும் மற்றச் சாமான்களும் வரும்படி போவார். இவர் இறங்குகிற இடங்களிலும் நவாபுக் கச்சேரியிலும் புலித்தோல் ஆசனத்தின் மேலும் உட்கார்ந்திருப்பார்"

மற்ெறுரு விபரம்: "வெளியில் போகும்போது பெஸ்கியார் நீண்ட நீல நிற அங்கியும் அதே நிறமுள்ள அரைக் கச்சையும் அணிவது வழக்கம். தலையில் நீல நிறத் துணியால் மூடப்பெற்ற வெண்ணிறத் தலைப் பாகை அணிந்திருந்தார். விரலில் பொன் மோதிரமும் காதுகளில் முத்தும் கெம்பும் பதித்த கடுக்கன்களும் அணிகலன்களாகக் கொண்டிருந்தார்."

"அவர் ஏறிச் சென்ற வாகனம் பல்லக்கு; இரு புறங்களிலும் ஒவ்வோர் ஆள் அவருக்கு விசிறிக்கொண் டிருப்பான்; மற்றொரு ஆள் உச்சியில் பொன் கலசம் வைக்கப்பெற்ற அவருடைய நீல நிறப் பட்டுக் குடை யைச் சுமந்து செல்லுவான்; இன்னும் இருவர் அவ ருக்கு முன் மயில்தோகைச் சாமரங்களைத் தூக்கி நடப்பர்."

இவ் வாழ்க்கைச் சித்திரம் ஒரு கட்டுக் கதையாகவு மிருக்கலாம். ஒரு இயேசு சபைத் துறவியின் சீவியம் இது என்று நம்புதற்கில்லை. சந்தா சாகிபு புதிதாக ஆதிக்கம் பெருக்கிய மராத்தியரிடம் பெருத்த தோல்வி யுற்று 1742-ல் திருச்சிராப்பள்ளியை இழந்தார். **சதாரா வுக்குச்** சிறை பிடித்துக்கொண்டு போகப்பெற்றார். அதே ஆண்டில் வீரமாமுனிவரும் திருநெல்வேலிப் பகு திக்கு மாற்றப் பெற்றார்.

1742-43 ம் ஆண்டுகளுக்கிடையில் தூத்துக்குடியும் வேம்பாறும் மணப்பாடும் சுவாமிகளின் புனிதத் திருப் பணியால் செழித்தன. மணப்பாட்டிலிருக்கும்போது பாவலர் **அந்தோனிக்குட்டி அண்ணாவியார்** முனிவரைக் கண்டு உரையாடி மகிழ்ந்த செய்தி வேறு ஒரு கதை யாகச் சொல்லப்படும்:

வீரமாமுனிவர் புலமையை அண்ணாவியார் கேள்வி யுற்று அவரை நேரில் கண்டு அளவளாவ ஆசைகொண் டிருந்தார். அவ்வாறே முனிவரும் அண்ணாவியாரைக் கண்டு பேசக் காத்திருந்தார். ஆனால் அவர்களுக்கு அவ்வாய்ப்பு வெகு காலமாகக் கிட்டவில்லை. ஒருநாள் வீரமாமுனிவர் மணப்பாட்டிலிருப்பதாகக் கேள்விப் பட்டு அண்ணாவியார் அவரைப் பார்க்கச் சென்றார்.

"நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்?

"நான் அந்தோனிக்குட்டி அண்ணாவி. தூத்துக் குடியிலிருந்து வருகிறேன். தங்களைத் தரிசிக்கும் பேறு இன்று கிட்டியது."

உள்ளம் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே என்பதற்கேற்ப இரு பெரும் புலவரும் மனங்கலந்து உரையாடினர்.

'நீர் பாடிய பாடலைப் பார்ப்போம்' என்றார் முனி வர். அண்ணாவியார் 'பேரின்பக் காதலை' எடுத்தார். முனிவர் பாடினார்: மகிழ்ந்தார். இளநகை காட்டி 'என்னுடைய பாக்களைக் கண்டதுண்டோ?' என்று வினவிய வண்ணமே தேம்பாவணியை நீட்டினார். அண்ணாவியார் அதை வாங்கிப் படித்து அடிகளாரின் கவித் திறமையைப் பெரிதும் பாராட்டினார்.

'உமது பாடல் செப்புக் காசு. எனது பாடல் தங்க நாணயம். அறிந்தீரோ?'

"அறிந்தேன் சுவாமி!"

"எதை அறிந்தீர்?"

'செப்புக்காசைச் சிறுவர்களும் பெரியவர்களும் மாற்றுவதற்கு எளிதாக இருக்கும். அதைப்போலப்

பேரின்பக் காதலைச் சிறுவர்களும் பெரியவர்களும் கற்று அதன் பொருளைச் சுலபமாக அறிந்துகொள்ளக்கூடும். பெரியவர்களே தங்க நாணயத்தை மாற்றத் தகுந்தவர்கள். அதைப்போன்று தேம்பாவணியின் நுண்பொருளை அறிதற்கு முதிர்ந்த புலமையுடைய பெரியவர்களே தகுந்தவர்கள்.

இது கதை. நிகழ்ந்ததாக இருக்கலாம்; நிகழாததாக இருக்கலாம். கதைக்குக் கண் மூக்கில்லை என்பார்கள். ஆனால் குற்றமற்ற எக்கதையிலும் கருத்தில்லாமல் போவதில்லை,

---

## அறிஞரும் அடிகளாரும்

**ஆய்ந்த அறிஞர் அநுதினமும் தம்மகத்துள்**
**வேய்ந்து துதிக்கும் விறல்முனிவன்—தோய்ந்துணர்வான்**
**எண்ணில் பனுவல் இயற்றினன் இன்னவன்பேர்**
**விண்ணொளிபோல் மின்ன விரைந்து.**

1746-ம் ஆண்டு அம்பலக்காட்டுக் குருமடத்தில் பெஸ்கியர் கட்டளைக்குருவாக நியமனம் பெற்றார். பக்தியிலும் படிப்பிலும் அங்கு அவரது மாலைக்காலம் கடந்தது. 1747-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ந் தேதி தமது 66-வது வயதில் விண்ணுலகு அடைந்தார்.

அவருடைய நினைவுக்கு அடையாளமாக இன்று ஒரு கல்லறையும் நாம் காணுதற்கில்லை. அவருடைய வடிவத்தைப்பற்றியும் சரியான குறிப்புகள் கிடைத்தில. சுவாமிகள் தாமும் மறு உலக பாக்கியத்தை நாடி, இதர மனிதரும் அதை அடைய இங்கு வந்து ஆற்றிய கத்தோலிக்க மறைப்பணியினாலும் நிகரற்ற தமிழ்ப்பணியி

ஞாலும் இவ்வுலகில் முதலாய் அழியாப் புகழ்பெற்று வாழ்கின்றார்கள். அவரே எழுப்பித் தந்த நூல்களால் அமைந்த கலைக்கோவில் ஒரு பொதுக் கோவில் அங்கே தமிழ் அன்பர்கள் வந்து அஞ்சலி செய்கின்றார்கள். தமிழ் அறிஞர்கள் புகழ்மாலை சூட்டி அவருடைய அரிய நூல்களைப் பற்றியும் மனமார வாழ்த்துகின்றார்கள்.

## கால்டுவெல் ஐயர்.

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் தமிழ் எழுத்தாளர்கள் தற்காலத் தமிழ் எழுத்தாளர் எனப்படுவர். இப்புகழ்க்குரியார் சைவ சமயத்தின ரான சுவாமி தாயுமானவரும் இத்தாலிய சேசு சபைக் குரு பெஸ்கியும் ஆவர். கல்வியிற் பெரியரான இந்தப் போதகர் உயர்தரப் பண்புகள் பொருந்திய உரைநடை நூல்களேயன்றி செந்தமிழில் ஒரு பெருங்காப்பியத்தை யும் இயற்றினார். இது மிகச் சிறந்த நிலை வகிக்கத்தக்க தென்பது திராவிட கவிராயர் யாவரும் ஒப்பமுடிந்தது.

## ஜி. யு. போப் ஐயர்.

தமிழிற் சிறந்த திருக்குறள், சிந்தாமணி, இராமா யணம், நாலடியார் என்பவைகளைத் தவிர்த்து இதர நூல்களில் முதலிடம் பெறத்தகுந்தது தேம்பாவணியே; சந்தேகமில்லை.

## உ. வே சுவாமிநாத ஐயர்.

தொன்னூலில் மேற்கூறிய ஐந்திலக்கணங்களு மின்றி வேறு சில விசேஷப் பகுதிகளும் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன. அந் நூலாசிரியராகிய வீரமா முனிவர் என்பவர் தமிழே வழங்காத அயல் நாட்டில் பிறந்து வளர்ந்தும் தமிழ் நாட்டுக்கு வந்து தக்க பண்டி

தர்களிடம் சென்று சென்று முறையே கற்றுத் தமிழ்ப் பாஷையின்கண் மிக்க அன்பு பூண்டு இத் தொன்னூலாகிய இலக்கணமும் தேம்பாவணி முதலிய இலக்கிய நூல்களும் இயற்றியது இக்காலத்தில் மிகவும் பாராட்டற்பாலது. இவருக்குத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லிய ஆசிரியர்களுள் முக்கியமானவர் பழனியிலிருந்த சுப்ரதீபக் கவிராயர் என்பவரென்று கேட்டிருக்கிறேன்.

**நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.**

நாம் வீரமாமுனிவரை நினைக்கும்போது சத்திய வேதத்தைப் போதிப்பதிலே தமிழ் பாஷையை ஓர் உத்தம கருவியாக ஏவல்கொண்ட ஒரு மகா போதகரின் திருவுருவம் என் மனக்கண்முன்பே வந்து நிற்கின்றது. முனிவரின் புகழ் உடம்பு தமிழ் மயம். நம் ஆசியாவில் என்ன ஐரோப்பா அமெரிக்காவில் என்ன திருத்தமான செந்தமிழை அறிந்தவர்க்கெல்லாம் செந்தமிழ் என்ற உடனே முனிவரின் நினைவும் ஓடிவரும். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், நீலகேசி முதலிய பழைய காவியங்களை நினைக்கும்போது அந்நாட்களில் தமிழை வளர்த்த சமணரையும் பௌத்தரையும் நினையாமல் விடுதல் கூடாது அன்றோ! அப்படியே தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் ஆகிய பிற்கால நூல்களை நினைக்கும் போது பின்னாட்களில் தமிழை வளர்த்த வீரமாமுனிவரையும் நினையாது விடுதல் கூடாது.

**சுத்தானந்த பாரதியார்.**

கலைக்கோயில் பொதுக்கோயில். சாதிமத வேறுபாடே அதில் இல்லை. உலக ஒற்றுமைக்குக் கலைப்பண்பு பெரிய சாதனமாகும். தமிழ்க் கலைக்கோயிலில் மேற்

கும் கிழக்கும் இணைந்து விளங்குகிறது. சைவர் வைணவர் சமணர் பௌத்தர் இஸ்லாமியர் கிறிஸ்துவர் அனைவரும் அக்கோயிலில் அன்புத்தொண்டு செய்திருக்கிறார்கள். ஆர்வமாலை சூட்டி அணி செய்திருக்கிறார்கள். இந்த அணி மணிமாலைகளில் ஒரு வாடாக் கற்பகமாலை காண்கிறது. அதுதான் தேம்பாவணி எனும் பெரும் காப்பியமாலை.

**சோமசுந்தர பாரதியார்.**

சென்ற ஐந்நூறு ஆண்டுகளில் தமிழ் மொழியில் எழுந்த சிறந்த செய்யுள் எதற்கும் இளையாத புலமை வளம் பொலிந்து இனிய செந்தமிழ் நடையும் சீரிய செம்பொருள் நலமும் நிறைந்து விளங்கும் தேம்பாவணி என்னும் காப்பியம் ஒன்றே வீரமாமுனிவரைத் தமிழர் என்றும் பாராட்டப்போதுமானது. அதன்மேல் உலக மொழிகள் எல்லாவற்றிலும் யாப்பு வகையிற் சிறந்த பாட்டு வகைகளைக் கையாளும் இவர் பேராற்றலுக்குச் சான்றாகத் திருக்காவலூர்க் கலம்பகம் திருப்பாவணி கித்தேரியம்மாள் அம்மானை முதலிய பாட்டுக்களும் பரமார்த்த குரு கதை வேத விளக்கம் வேதியர் ஒழுக்கம் போன்ற உரை நூல்களும் தொன்னூல் விளக்கம் போன்ற ஆழ்ந்த ஆராய்ச்சித் திறம் காட்டும் இலக்கண நூல்களும் இயற்றித் தமிழ்மொழிக்கு வளமும் தமிழருக்கு நல்விருந்தும் தந்த இப்பெரியாரைத் தமிழ்ச் சங்கமிருந்த மதுரை இன்று கொண்டாடுவது மிகப் பொருத்தமாகும்.

**ரா. பி. சேதுப்பிள்ளை.**

இத்தாலிய நாட்டு வித்தகர் தமிழ் மொழிக்குச் செய்த ஒப்புயர்வில்லாத உயர்தனிப் பெரும்பணி தமிழர்

களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் திறத்தது. அவர் தமிழ் ஆக்கத் துறைகளிலெல்லாம் வழிகாட்டியாகவும் ஒளிகாட்டியாகவும் இலங்குகின்றார்....அவர் ஆக்கிய நூல்களால் தமிழ்த்தாய் அழகு பெற்றாள். தேம்பாவணி தமிழ் அன்னையின் கழுத்தில் வாடாத மாலையாய்த் திகழ்கின்றது. காவலூர்க் கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சி அளிக்கின்றது. தொன்னூல் பொன்னூலாக இலங்குகின்றது. சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது. வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களில் ஒருவராக விளங்குகின்றார்.

**அ. சிதம்பரநாதச் செட்டியார்.**

வேறொரு மொழிப் புலவர் தமிழ் மொழியில் நிரம்பிய புலமையொடு திகழ்தல் அரிது அதனினும் அரிது அம்மொழியிற் சிறந்த காவியங்களையும் இலக்கணங்களையும் இயற்றுதல் என்பது. அவர் இயற்றிய தேம்பாவணி சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம் முதலியவற்றோடு ஒப்பு நோக்கி இன்புறத்தக்கது. முன்னோர் செய்த நூலின் பொருளையும் சொல்லையும் வாங்கிக் கொண்டு, புதிய இனிய எளிய முறையில் "தொன்னூல் இலக்கணம்" என்னும் பெயரால் முனிவர் ஓர் ஐந்திலக்கண நூல் இயற்றியுள்ளார். மேலும் சதுரகராதி என்று அவரால் இயற்றப்பட்டுள்ள அகராதி தமிழ் மக்களுக்கு ஊன்றுகோலாய் உதவும் ஒரு பனுவலாகும். இவையன்றியும் அவரால் இயற்றப்பெற்ற பல உரை நடை நூல்கள் தமிழிற்கு அணி செய்வன. உரமுடை உரை நடை வகையைப் புதுக்கித் தமிழிற் பெரு வழக்கத்திற்குக் கொண்டுவர வழி காட்டியவருள் தலைசிறந்தவர் வீரமாமுனிவர்.

**தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்.**

வீரமாமுனிவர் தமிழரொடு வாழ்ந்து தமிழே உருவமாக மாறிவிட்டார். தமிழைப் பாடித் தமிழை வளர்த்தார். தமிழிற் பேசித் தமிழை வளர்த்தார். தமிழ் உரை நடையில் எழுதித் தமிழை வளர்த்தார். தமிழில் இருந்த பேரன்பு, பேச்சுத் தமிழாம் கொடுந் தமிழுக்கும் இலக்கணம் எழுதத் தூண்டியது. இத் தகைய தமிழனைத் தமிழ் நாடு மறக்கப்போமோ? அவரியற்றிய தமிழ் நூல் அனைத்தும் வெளி வருதல் வேண்டும். தமிழை மேனுட்டார் அறியச் செய்தவர் இவரே யன்றே? தமிழின் புதிய உரை நடையின் தந்தையும் இவரே யன்றே?

**எம். எஸ். சுப்ரமணிய அய்யர்.**

பெஸ்கியர் இத்தாலிய நாட்டில் உயர் குடும்பத்தில் பிறந்தவர். படிப்பும் பண்பும் மிகுந்தவர். ஐரோப்பிய தேச பாஷைகள் பலவும் கற்றறிந்தவர். இங்கே வந்த ஓர் ஐந்தாண்டினுக்குள் தமிழ்ப் பண்டிதரானுர். நாற்பது வருஷ காலம் தமிழகத்திலேயே இயேசு மத துரந்தரராக விளங்கிய அவரைப் பலரும் போற்றினர். தமிழிலே அவர் இயற்றிய வசன நூல்களும் செய்யுள் நூல்களும் பலவாம். அந்நூல்களில் தமிழ் மணம் இனிது வீசும். தமிழுக்கு அவர் செய்த ஊழியத்தை மறக்க ஒண்ணுது. வீரமாமுனிவர் என்ற பெயருக்கேற்ப வீரமாகவே வாழ்ந்து துறவியாகவே திகழ்ந்தது பெருமையேயாம்.

**எம். இராஜமாணிக்கனுர்.**

மேனுட்டிற் பிறந்து தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ்ப் பணிசெய்து தமிழ் அன்னையை உலகறியச்

செய்த உத்தமராகிய பெஸ்கி அடிகளை நாம் எவ்வாறு பாராட்டுவது! அப்பெரியார் செய்துள்ள தமிழ் நூல்களைப் படித்து அவருக்கு வணக்கம் செலுத்துதல் வேண்டும்; வேற்று நாட்டாராகிய அவர் நந்தமிழ் மொழி மீது கொண்ட பற்றில் பாதி அளவேனும் நாம் கொண்டு நமது தாய்மொழிக்குத் தொண்டாற்றவேண்டும், தமிழ் வாழ நாம் வாழ்வோம் என்பதை மறவற்க. 'தமிழ்' என்னும் நினைவு வரும்பொழுதெல்லாம் தமிழ்ப்பணி செய்த வீரமாமுனிவரது நினைவு கொள்க. அடிகளைப் போற்றுதும்! அவர் தமிழ்ப் பணி போற்றுதும்!

**திருமதி ஜீவா விசுவநாதன்.**

வீரமாமுனிவர் தம் மதத்தொண்டு, தமிழ் மக்கள் எளிதில் ஏற்குமாறு அவர் தம் பழக்க வழக்கங்களை அநுசரித்தே நடந்து வந்ததால் இப்பணியை முனிவர் செவ்வனே செய்ய ஏதுவாயிற்று. மேனாட்டார் யாவரும் இவரது வெற்றி கண்டு ஆச்சரியமடைந்தனர். மேனாட்டு நாகரிகத்தையும் தமிழர் நாகரிகத்தையும் இணைப்படுத்தித் தொண்டாற்றியவர் வீரமாமுனிவர்.

**சி. ஆ. பெ, விசுவநாதம்.**

தேம்பாவணி ஒரு பொன் உலைக்கூடம். அதில் சொல்லழகும் பொருளழகும் இணைந்து ஒளிர்கின்றது. தமிழுக்கு என்றும் பயன்தரும் முறையில் புதுமையாக 'சதுர் அகராதி' என்னும் பெயரில் ஒரு தூய தனித் தமிழ் அகராதி ஆக்கித் தந்தார். உரைநடைத் துறையிலும் நகைச்சுவையின் மூலம் உயரிய நல்ல கருத்துக்களையும் நீதிகளையும் பரமார்த்த குருவின் கதையின் வழியே உணர்த்தி யருளினார். இங்ஙனம் என்றுமுள்

தென்றமிழுக்கு இனிய தொண்டாற்றி மறைந்த மாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றையும் காவியங்களையும் படித்துப் பயனடைதல் நமது தமிழ் மாணவர்கள் கடமை. தொண்டு செய்த வீரமாமுனிவர்க்கு இதன் வழி நாம் நன்றி செய்யவேண்டும்.

சேசுசபை **சங். பிரான்ஸிஸ் முருயிஸ்**

தேம்பாவணியைப் படிப்பவரின் மனதில் தொனிக்கும் முதல் கேள்வி, முக்கிய கேள்வி, ஓரே கேள்வி இது ஒன்றே—அந்நிய நாட்டினர் ஒருவரால் எப்படி இந்நூல் எழுத முடிந்தது? வீரமாமுனிவரைச் சரிவர அறிய வேண்டுமானல், இக்கேள்வியின் முழுப் பொருளையும் உணரவேண்டும். தேம்பாவணி தமிழ்க்காவிய நடைக்கு சிறந்த உதாரணம். மேல் எழுந்த கேள்வியோ நூலின் நடையைமட்டும் பொறுத்ததல்ல. இந்நூலைக் கற்பவர் நூலாசிரியரின் தமிழ்இலக்கியஅறிவைக்கண்டு வியப்பர். ஆயினும், அந்நிய இலக்கியங்களைக் கற்றுணர்ந்து ஊறித் திளைத்தவர் வேறு ஒரு சிலர் இருக்கிருர்கள். ஆங்கில கதாசிரியர் (Conrad) என்னும் போலிஷ் நாட்டினர் இத்தகையவர். முன் குறித்த கேள்வி இவ்விலக்கிய அறிவையும் கடந்து செல்கிறது. ஒரு நாட்டு மக்களின் வழக்கங்கள் இலட்சியங்கள் வேறுபாடுகளை அந்நாட்டில் நெடுநாள் வாழ்ந்தவர்—அவருக்கு அந்நாட்டு மக்கள்மீது உண்மை அநுதாபம் இருக்குமேல்—ஒரு சிறிது பெறுவர். வீரமாமுனிவரின் காவியத்தில் நாம் காணும் அற்புதம் இதையும் தாண்டி நிற்பது. அந்நிய தேசத்தினர், ஐரோப்பிய நாட்டினர் எழுதிய அத்தமிழ் நூலில் விதேசத்தின் அறிகுறிகள் ஒன்றையும் காணேம். தமிழரில் தமிழன் எழுதிய காவியம் அது. தமிழ் இலக்கிய

உணர்ச்சிமட்டுமல்ல; தமிழ் வாழ்க்கை உணர்வு ததும்புகிறது; தமிழன் இதயத்துடிப்பைக்காண்கிறோம். அதை எழுதியவர் அந்நியர், இத்தாலியர் என்று நூலினின்று காட்டுங்கள். இத்தாலிய நாட்டைப்பற்றி சில செய்யுள்கள் இடையில் செருகி இருக்கிறார். "எனையீன்ற இளையா இத்தாலியா நாடு" என்று புலம்புகிறார். ஆனால் கனவில் புலம்புகிற சொற்கள் இவை. இத்தாலிய நாட்டினர் இறந்துபோயினர். இந்தியாவில் தமிழகத்தில் தமிழராய்ப் பிறந்துள்ளார்.

## எம். அற்புதசாமி ஆச்சாரி

நிலவுலகில் உலவிவரும் பல மொழிகளில் தமிழ் மொழி சிறப்புற்று விளங்குகின்றது. தமிழை வளர்க்கவும் சத்திய மறையை விளக்கவும் நானிலத்தில் சிறந்த இத்தலி தேசத்தில் பிறந்து கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்னும் நாமம் பெற்றுத் தாய்ப்பாஷையாகிய இத்தலி மொழியையும் பிரெஞ்ச், இலத்தீன், எபுரு, கிரேக் முதலிய பிற பாஷைகளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து குருப்பட்டம் பெற்றுப் பல பாஷை வல்லுநராய் இருப்பதை முன்னிட்டு வேதபோதகராக இவ்விந்தியாவுக்கு அனுப்ப நம் நாடு வந்து தமிழ்நூற் சோலையிற் புகுந்து கற்பனை அலங்கார இன்பங்களை நுகர்ந்து தைரியநாத சுவாமிகள் அல்லது வீரமாமுனிவர் என்னும் காரணப்பெயருடன் சத்திய மறைப் போதகத்திற்குகந்த நூல்களில்லாக் குறையைத் தவிர்க்க உன்னி சீரிய மொழியும் அழகிய இலக்கியமும் பொருந்தப்பெற்ற தமிழில் வேதவிபரண சாத்திரமென்னும் வாடாத மாலையாக மூன்று காண்டம் முப்பத்தாறு படலம் மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து செய்யு

ளுள்ள தேம்பாவணி என்னும் நூல் இயற்றித் தந்தார் நம் முனிவர்.

மறையவரும் புலவரும் வியப்புறும்படித் தேனினும் அமுதினும் இனிய பாக்களைக்கொண்ட அந்நூலை யாவரும் ஊக்கத்தோடு கற்றுணர்ந்து அதிலுள்ள சத்தியவேத சாத்திர அணியலங்காரங்களை மனத்தின் கண் பதித்து இன்பம் நுகரப் பிரார்த்திக்கின்றேன்.

**எம். இரத்தினசாமி.**

மொழியின் அழகெல்லாம் திரண்டு விளங்குவது பாட்டிலேதான். மொழியின் உயிர்நிலையாவார் பாவாணரே. தமிழன் எனத் தக்கவன் தமிழ்ப் பாவலனே. வீரமாமுனிவர் அத்தகைய தமிழர்.

அந்த நாளில் ஏதோ வேறு உலகம் என நினைக்கத் தக்க மேல்நாட்டிலிருந்து வந்து கிறிஸ்துநாதரின் உயர் மொழியின்படி மக்கள் அனைவரையும் உடன்பிறந்தாராகக்காணும் அன்புக்காட்சியில் பழகித் தமிழ்நாட்டில் தமிழராகவே வாழ்ந்து தமிழில் பாடியவர் வீரமாமுனிவர். மேனாட்டுக் கலையும் தமிழ்க்கலையும் முதன் முதல் ஒருங்கு இயைந்து விளங்குமாறு இவர் பாடிய தேம்பாவணி புது உலகம் போற்றும் காவியமாக விளங்கும். அதனையும் அவர்தம் பிற நூல்களையும் அறியுமாறு செய்வது தமிழறிஞர் கடனாகும். இத்துறையில் அத்தமிழ் அறிஞரை ஊக்குவிப்பது தமிழ்ச் செல்வர் கடனாம்.

# தமிழ் வளர்த்த தந்தை

ஆண்டகைகள் போற்றும் அறநெறியர் ஆர்ப்பரிக்கும்
வேண்டுவன யாவும் விழைந்தளிக்கும் காண்டமென
ஈங்கெழுமா வள்ளல் எழில்வீர மாமுனியின்
பூங்கழற்கீழ் வாழ்வாம் பொதிர்ந்து.

*வீரமாமுனிவர் தமிழ்நாட்டிற்கு வந்தது 1711-ம் ஆண்டில். இவர் இங்கு வரும்போது அவருக்கு வயது 30. முனிவர் மரித்தது 1747-ம் ஆண்டில். 31-வது வயதிற்கும் 67-ம் வயதிற்கும் இடையிட்ட ஊக்கம் நிறைந்த 36 ஆண்டுகள், தம் கத்தோலிக் மறைச் சேவையிற் போலவே தமிழ்ச் சேவையில் முனிவர் பெருந்தகையால் செலவிடப்பெற்றன. முனிவர் பிறப்பால் இத்தாலியர். உழைப்பாலும், உள்ளப் பண்பாலும் தமிழர்.*

*வீரமாமுனிவரைத் தமிழ் வளர்த்த தந்தை என்கிறோம், இது உண்மை; உபசாரமல்ல. வீரமாமுனிவர் தமிழர் தந்தை. வள்ளுவப் பெருந்தகை வகுத்த இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குந் தந்தை. "தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப் பச் செயல்" என்பது வள்ளுவர் வாக்கு. நமது தந்தையாகிய வீரமாமுனிவர் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும், உலக சபையிலே முந்தி இருக்கும்படியாக வேண்டுவனவெல்லாம் செய்திருக்கிறார். "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்ற பெருமித நிலையை நாம் அடைந்துளோம் என்றால் அந்நிலையை அடைய அயராது உழைத்து உதவியவர் சுவாமி வீரமாமுனிவர். "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்*

தந்தை என் நோற்றான் கொல் என்னுஞ் சொல்" என்றார் வள்ளுவர். தமிழ் மக்களாகிய நாமும் நமது வீரமாமுனிவர்க்கு ஒரு பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும். நம்மைக் காணும் பிறமொழியாளர், இத்தமிழ் மக்களைத் தம் செல்வமைந்தராகக் கொள்ள இம்முனிவர் என்ன தவம் செய்தாரோ என்ற புகழை அவருக்குக் கொடுக்கும்படியான பெருங்கடமை நமக்குண்டு. தந்தை அறிவு மகனறிவு என்பார்கள். வீரமாமுனிவர் தந்த கலைச்செல்வத்தை நமது முன்னோர் உரிமைச் சொத்தாகப் பேணுவோம்.

முனிவரது தமிழ்ப்பற்றை என்னென்போம்! ஒன்றிரண்டு மொழிகள் மட்டும் தெரிந்தவரல்ல. ஒன்பதிற்கு மேற்பட்ட மொழிகளை உணர்ந்த வள்ளல் அவர். தமது தாய் மொழியாகிய **இத்தாலிய** மொழியோடு **பிரென்ச், போர்த்துக்கீஸ், இஸ்பாநியம், கிரேக்கம், எபிரேயம், இலத்தீன்** மொழிகளில் நிரம்பிய புலமையுடையவர். **பாரசீகம், இந்துஸ்தானி, தமிழ், தெலுங்கு** ஆகிய மொழிகளிலும் பயிற்சியுடையவர். தமது தாய் மொழியிலோ அல்லது தமக்குப் பயிற்சி மிக்குள்ள பிற மொழிகளிலோ நூல்கள் இயற்றாமல், நமது தமிழ் மொழி சம்பந்தமான, காவியங்கள், உரை நடை, இலக்கணம் சமைத்த பெருமை முனிவர்க்குரியது.

தமிழ் நூல்களை யாக்கின்ற வகையில் தமிழ் மரபு பிசகாத நெறியில் அவற்றை அமைத்துச் செல்லுதல் அவர் தம் கனிந்த தமிழ் உள்ளத்தின் பிழிவாக விளங்கும். தேம்பாவணிச் சிறப்புப் பாயிரத்தில் "ஆரியவளன்றன் காதை அற முதல் விளங்கச் சொல்வாம்" என்றார். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறு

திப் பொருள்களை அடைதல் நூலின் பயன். வளனாகிய சிஷ்ட சூசைமா முனிவரது கதையைக் கேட்போருக்கும் பயன் கூறுகின்றார் வீரமாமுனிவர். அது யாது? அறம் பொருள் இன்பம் வீடு ஆகியவற்றை அடைதல். இந்நெறி தமிழ் நூல்களில் பரக்கக்காணும் நன்னெறி.

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை, தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்ற பழம் பாடல் இங்கு நினைவில் இருத்தற்பாலது. சிறந்த தமிழ்ப் புலவன் அவையடக்கங் கூறுவதைத் தன் கடமையாகக் கொள்கின்றான். நிறைந்த அறிவுடைய பெரும் புலவர்கள் தம்மைக் குறைந்த அறிவுடையவர்களாகவே எண்ணிப் பேசுவர்.

"ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத்தி ராமன் கதையரோ"

என்றார் கம்பர். திருப்பாற்கடலை யடைந்து அதிலுள்ள பால் முழுமையும் ஆசைகொண்டு நக்கப் பிரவேசித்தாற் போல, குற்றமில்லாத வெற்றியையுடைய இராமன் கதையை ஆசை காரணமாகச் சொல்லத் தொடங்கினராம் கம்பர். முனிவர் அவை அடக்கம் இத்தகையதே.

"சூசையுற் றனவரங்கள் தூய்கடல் கடக்கல்இல்லா
ஓசையுற் றொழுகமிர்தம் உடைகடல் என்னநண்ணி
பூசையுற் றதனைநக்கப் புக்கென உளத்தைத்தூண்டும்
ஆசையுற் றாமனேனும் அருங்கதை அறையலுற்றேன்"

என்கிறார் வீரமாமுனிவர்.

நம் தமிழ்ப் புலவர்க்கு இயல்பான உயர்வு நவிற்சி களிலே திளைக்கிறார் வீரமாமுனிவர். உயர்வு நவிற்சி புலமைக் கூற்று என்பது மாத்திரமல்ல. உயர்வு நவிற்சி உலக வழக்கு. உலக வழக்கில் உற்சாக மூட்டி உரை நயம் ஏற்றுவது உயர்வு நவிற்சி. செய்யுள் வழக்கிற்கு உயிர் கொடுப்பது உயர்வு நவிற்சி. வீரமாமுனிவர் செய்யுளில் உயர்வு நவிற்சியை அநாயாசமாகக் கையாளு கின்றார்.

தேம்பாவணி போன்ற காவியங்கள் புலமை படைத்தவர்க்கே விருப்பந்தருவன; ஊன்றிப் படிக்க வேண்டும் என்ற விழைவைத் தூண்டுவன. செய்யுள் நடை சாதாரண மக்களுடைய கவர்ச்சியை எளிதில் பெறுவதில்லை உரைநடையே பண்டிதர்க்கும் பாமரர்க் கும் ஒருசேர எளிதில் இன்பம் பயப்பது. சாதாரணமாக மக்கள், உரைநடையையே படித்துப் பயன் பெறுகிறார் கள். முதன்மையான, முதல்தரமான உரைநடையை வகுத்தவர் நம் தமிழ் வளர்த்த தந்தை வீரமாமுனிவர்.

முனிவர் பண்டிதர்க்கும் நூல் செய்தார்; பாமரர்க் கும் நூல் செய்தார். பெரியோர்க்கும் நூல் செய்தார்; குழந்தைகட்கும் நூல் செய்தார். சிறுவர் சிறுமியர் கதை கேட்பதில் இயற்கையான விருப்பத்தைக் காட்டுவதை நாம் அடுத்தடுத்துக் காண்கிறோம். நாம் சாதாரணமாக ஒரே மாதிரியான கதையைச் சொல்லி அவர்களைத் திருப் திப்படுத்தப் பார்க்கிறோம். அவர்தம் உணர்வை எழுப்பு கின்ற அறிவை வளர்க்கின்ற ஆற்றலை மிகுக்கின்ற கதை களை, வீரமாமுனிவர்தம் பரமார்த்த குருவின் கதை என்ற நூல் சுரக்கின்றது. புதிய புதிய அம்சங்கள், நடைமுறை வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்னைகளை,

சிக்கல்களைத் தீர்த்து வைக்கின்ற அரிய கதைகள், இந் நூலில் இடம் பெற்றுள்ளன. சிறுவர் சிறுமியர்க்கு இக்கதைகளைச் சொல்லிக்கொடுத்தால் மிகுந்த பயன் விளையும். தொழிலாளர் இக்கதைகளைக் கருத்தூன்றிப் படித்தால் தமது சொந்தப் பிரச்னைகளைத் தீர்க்கும் மார்க்கத்தை இவற்றில் காண்பர். வீரமாமுனிவரது கதைகள் சிறந்த கருத்துக்கள் செறிந்தவை. பரமார்த்த குருவின் கதையைப் படிக்காதவனைப் பரமார்த்தன் என்றே சொல்லுதல் கூடும்.

இலக்கணம், காவியம், பிற பிரபந்தங்கள், உரை நடை, கதை ஆகிய இத்துறைகளிலெல்லாம் வியத்தகு சேவை செய்து தமிழ் வளர்த்த தந்தையைப் பாராட்டி அவர் தமக்கு விழாக்கள் எடுக்கும் நற்பணி நாட்டில் புற்பல இடங்களில் மேற்கொள்ளப்படுவது மனமகிழ்ச்சியைத்தருவதாகும். இத்துணை பேருக்கத்தோடும், மகத்தான உற்சாகத்தோடும் இடங்கள்தோறுங் கொண்டாட்டங்கள் நிகழ்வது குறித்து, இதனை ஏசியமாகக் கொண்டு, நாம் முனிவர் பெருந்தகையின் நூல்களை மேலும் மேலும் படித்துப் படித்துப் பயன்பெற உறுதிகொள்வோம்.

---

Printed at Sri Bharathi Press, Choolai, Madras.

திருக்குறள் எளியவுரை

ரூ 1-8-0

திருக்குறள் அரும்பதவுரை

ரூ 1-4-0

திருக்குறள் வசனம்

அறத்துப்பால் ரூ 1-4-0

திருக்குறள் நீதிக்கதைகள்

4 பாகம் ரூ 1-14-0

ஒற்றுமை, மதராஸ்-17